மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

இல்லம் : 10 சுற்றம் : 2 / பிப்ரவரி 2020 / ஆசிரியர் : விசவனூர் **வே.தளபதி** / விலை : ரூ.10/-



தமிழர் மறுமலர்ச்சி மூலவர்

## வள்ளலார்



அச்சுக்கலையின் தந்தை

## என்றீக்கே என்றிக்கசு



## "காவிரிடெல்டா பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலம்"

## முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி அறிவிப்பு


வலைத் தளத்தில்
வாழ்வியல்
சொல்லும்
களம்...
பாருங்கள்!
முற்றம்
MUTRAM TV
இணைய தொலைக்காட்சி

மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly February 2020

ஆசிரியர்
**விசவனூர் வே.தளபதி**
இணை ஆசிரியர்
பேராசிரியர் **அப்பாத்துரை**
துணை ஆசிரியர்
**இமயவரம்பன்** பி.எஸ்சி.,எம் .ஏ.,பி.எல்.,
செய்தி ஆசிரியர்
**ம. வில்லியம் எபனேசர்**
உதவி ஆசிரியர்கள்
**ஜெ. ராஜாசிங்,**
**ஆரோக்கிய சார்லஸ்**
தலைமைச் செய்தியாளர்கள்
**வே. வளையாபதி**
**த. ஞானமணி** பி.எஸ்.சி., பி. எட்.,
செய்தியாளர்கள்
**பொன்முடி** சிவகங்கை
**சைதை மணிமாறன்**
**அருண் ஹென்றிக்ஸ்** கோவை
**செபாஸ்டின்** திருச்சி
**ஜான் ஜெயராமன்**
**சாதிக்பாட்சா**
**மு.கலைச்செல்வன்**
**ஆ.சிரோன்மணி**
**முருகன் தேவேந்திரன்**

நிர்வாகம்
**மணிகண்டன்**
வடிவமைப்பு
**எழில் வரைகலை**
புகைப்படக்காரர்
**ஆபிரகாம் லிங்கன்**

அலுவலக முகவரி
எண் 124, சுப.வீ. தெரு, (என்.டி.ஆர். தெரு),
ரங்கராஜபுரம்,கோடம்பாக்கம், சென்னை- 24
பேச: 8056281973, 044 42154408.
மின்னஞ்சல்: mutram2010@gmail.com
இணைய தளம் : **www.mutram.in**

MUTRAM
Indian Bank Account No,CA 920493454.
IFSC: IDIB000KI41
Rangarajapuram branch. Kodambakkam, chennai

## உள்ளே

பழனிசாமி டெல்டா மக்களின் சாமி! (தலையங்கம்) ..................4

தமிழர் மறுமலர்ச்சி மூலவர் வள்ளலார்
- இருங்கோவேள்............................................................ 5

இந்திய அச்சுக்கலையின் தந்தை என்றீக்கே என்றிக்கசு
- விசவனூர் வே. தளபதி..................................................... 8

கடலோரா காவல்படை அணிவகுப்பை வழிநடத்திய
தமிழக பெண் அதிகாரி..................................................... 10

மருத்துவ குணமுடைய தமிழர் அரிசி வகைகள்...................... 11

சாவர்கர்......................................................................... 15

தமிழ் இலக்கிய வரிசை ....................................................22

வருமானத்தை மறைத்த ரஜினிகாந்த்................................ 23

ஊராட்சி தலைவர்கள் காசோலையை
பயன்படுத்தக் கூடாது ......................................................24

உழவன் செயலியில் கூடுதல் சேவை அறிமுகம்.................. 27

அனைவருக்கும் வீடுதிட்டம்.............................................. 29

இனி குப்பைகள் அகற்ற கட்டணம்..................................... 31

கேரளாவிலுள்ள தேவாலயத்தில்
நெகிழ்ச்சி சம்பவம்......................................................... 32

என்னவாயிற்று தமிழர்களுக்கு?....................................... 33

முற்றம் இதழில் வெளியிடுவதற்காக அனுப்பப்படும் படைப்புகளைத் திருத்துவதற்கும் வெளியிடாமல் இருப்பதற்கும் ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. *- ஆசிரியர்*

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் “mutram” என்ற பெயருக்கு
எடுத்தனுப்பலாம்.



# பழனிசாமி டெல்டா மக்களின் சாமி!

சேலம் மாவட்டம் தலைவாசலில் ஒருங்கிணைந்த கால்நடை பூங்காவிற்கு அடிக்கல் நாட்டிய தமிழக முதலமைச்சர் மாண்புமிகு எடப் பாடி பழனிசாமி அவர்கள், மக்கள் மனங்களை குளிர வைக்கும் ஒரு செய்தியை மக்கள் முன் வைத்தார். “தஞ்சை, நாகை, திருவாரூர் உள்ளிட்ட டெல்டா மாவட்டங்கள், பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக மாற்றப்படும். இதில் அரியலூர், புதுக்கோட்டை, கடலூர் முதலிய மாவட்டங்களும் அடங்கும். இந்த மண்டலத்தில் ஹைட்ரோகார்பன் எடுக்க தமிழக அரசு அனுமதி தராது“ என்பதுதான் அது.

உண்மையிலேயே வரவேற்க வேண்டிய மிகவும் முக்கியமான அறிவிப்பு இது. அதிமுக அரசிற்கு எதிராக இருந்தவர்கள் பலரும் இதை வரவேற்கிறார்கள். கடந்த காலங்களில் ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் மாறி மாறி நீங்கள்தான் அதைக் கொண்டு வந்தீர்கள், என்று குற்றம் சாட்டி வந்த நிலையில், அதற்கு ஒரு முற்றுப் புள்ளியை வைத்திருக்கிறார் முதல்வர். தீமையை கொண்டுவந்தவர்களைப் பற்றிக் பேசிக் கொண்டிருக்காமல், தீமையை ஒழிக்க முயன்றிருக்கிற முதல்வருக்கு தமிழகத்தின் ஒட்டுமொத்த மக்களும் நன்றி தெரிவித்துக் கொண்டி ருக்கிறார்கள்.


இதிலும் சில எதிர்க்கட்சிகள், அதிமுக மீது எதிர்க்கருத்துக்கள் கொண்டிருப்போர், ஹைட்ரோகார்பன், மீத்தேன் போன்றவற்றை எடுப்பதற்கு, இதற்கு முன் வேதாந்தா, ஓ என் ஜி சிக்கு கொடுக்கப்பட்ட அனுமதிகளை ரத்து செய்ய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா? நடுவண் அரசிடம் பேசுமா? அல்லது அவை கொடுத்தது கொடுத்ததுதான். நடுவண் அரசிடம் பேச இயலாது என்று கூறுமா? என்ற ஐயத்தை வெளிப்படுத்துகிறார்கள். இந்த ஐயம் பொதுமக்களின் மனங்களிலும் குடியேறி குடைந்து கொண்டிருக்கிறது. இதற்கும் சரியான தீர்வை நடுவண் அமைச்சகத்தின் மூலம், முதலமைச்சர் பெற்றுத் தருவார் என்றும் சிலர் நம்புகின்றனர்.



முதல்வரின் செய்தி வெளியானதும் டெல்டா பகுதி களின் மக்கள் வெடி வெடித்துக் கொண்டாடி மகிழ்ந்திருக் கின்றனர். இந்த மகிழ்ச்சி தொடர முதலமைச்சர் நடுவண் அரசோடு பேச்சு வார்த்தை நடத்தி, மக்கள் நல அறிவிப்பு களை வெளியிடுவார் என்று முதல்வரின் ஆதரவாளர்கள் கூறுகிறார்கள்.

சில நடுநிலையாளர்களோ, அதிமுகவிற்கு இருந்த பின்ன டைவுகளை இந்த அறிவிப்பு நேர்படுத்தும் என்று கணிக் கின்றனர். நடுவண் அரசின் ஒரு சார்புக் கொள்கைகள் எக் காலத்திலும் தமிழ்மண்ணில் ஏற்றுக் கொள்ளப்படாது என்பதை அறிந்தே முதல்வர் சில நல்ல முடிவுகளை எடுக்கத் தொடங்கிவிட்டார் என்பது உண்மையாகிக் கொண்டிருக் கிறது. முதலமைச்சர், சூழல் காரணமாக பதவிக்கு வந்தவர், அவரால் எதுவும் சிறப்பாகச் செய்துவிட முடியாது என்ற கருத்துகளை இடுகாட்டிற்கு அனுப்பிவிட்டு, சிறந்த ஆட்சி யாளர் என்ற பெயருடன் கோட்டையில் குடியிருக்கத் தொடங்கியிருக்கிறார் என்பது வெளிப்படையாக தெரிய வந்திருக்கிறது. மக்கள் நல எதிர் நடவடிக்கைகளை, ஒவ் வொன்றாய் களையத் தொடங்கியிருக்கும் முதல்வர் பழனி சாமி டெல்டா மக்களின் சாமியாகியிருக்கிறார்.

இருங்கோவேள்



# தமிழர் மறுமலர்ச்சி மூலவர் வள்ளலார்

இராமலிங்கம் என்ற இயற்பெயருடன் வாழ்க்கையைத் தொடங்கி, இராமலிங்க அடிகளார், அருட்பிரகாச வள்ளலார் என்று உயர்ந்த வள்ளலார் அவர்களின் நினைவு நாள் சனவரி முப்பது ஆகும். உயர் தமிழர் மரபுகளின் அடையாளமாக வாழ்ந்தவர் வள்ளலார். 'யாதும் ஊரே யாவரும் கேளிர், தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்ற வரிகளின் வாரிசான வள்ளலார், பதினாறு அடி பாயும் பிள்ளைப் புலியாக 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்றார்.

மனித இனத்தின் மேல் மட்டுமல்ல உலகில் உள்ள அனைத்து உயிர்களிடத்திலும் அன்பு வைக்க வேண்டும் என்பதை மனித இனத்திற்குச் சொல்லிச் சென்றவர் வள்ளலார். புவனகிரிக்கு வடமேற்கே எட்டு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மருதூர் என்ற சிற்றூரில் வேளாண் குடும்பத்தில் 1823ஆம் ஆண்டு அக்டோபர் ஐந்தாம் நாள் பிறந்தார் வள்ளலார்.

1851ஆம் ஆண்டு ஒழுவில் ஒடுக்கம் என்ற நூலையும் 1855ஆம் ஆண்டு தொண்டமண்டல சதகம் என்ற நூலையும், 1857ஆம் ஆண்டு சின்மய தீபிகை என்ற நூலையும் தந்துள்ளார். ஆறாயிரம் பாடல்களைக் கொண்ட திருவருட் பாவையும், மனுமுறைகண்ட வாசகம், சீவகாருண்ய ஒழுக்கம் என்ற நூல்களையும் உலகிற்கு தந்து சென்றவர் வள்ளலார்.

1865ஆம் ஆண்டு சுத்த சன்மார்க்க சங்கத்தை நிறுவினார் வள்ளலார். 1867ஆம் ஆண்டு சத்திய தருமசாலையை நிறுவினார். 1870ஆம் ஆண்டு சித்தி வளாகத்தை நிறுவினார். 1872ஆம் ஆண்டு சத்திய ஞான சபையை நிறுவினார்.

அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை என்ற சொற்களைத் தந்து, அதை ஒரு இயக்கமாகவே மாற்றிச் சென்றவர் வள்ளலார். வள்ளலார் அவர்கள் கடவுளுக்கு அடுத்த நிலையில் வைத்துப் போற்றக் கூடிய தமிழ் ஆளுமை. ஆனால், ஆரிய ஆதிக்கத்தின் காரணமாக அவரது கோட் பாடுகள், இயக்கச் செயல்பாடுகள் மட்டுப்படுத்தப் பட்டன என்றாலும், உயர்ந்த கோட்பாடுகள் மக்களை என்றென்றும் ஆண்டு கொண்டிருக்கும் என்பதே மனிதத்தின் மாண்பு.

**வள்ளலார் வகுத்த தினப்படி வாழ்க்கைமுறை!**

1. கதிரவன் எழும் முன் தூக்கம் நீங்கி எழுந்து கொள்ள வேண்டும். சிறிது நேரம் அமர்ந்து கடவுளைத் தியானம் செய்யவேண்டும்.



2. இயற்கைக் கடன்களைக் கழித்தபின் செவிகள், கண்கள், நாசி, வாய், தொப்புள் இவற்றில் அழுக்கு, பீளை, சளி, ஊத்தை என்கிற அசுத்தங்களையும் கை, கால் முதலிய உறுப்புகளில் உள்ள அழுக்குகளையும் வெந்நீரால் தேய்த்துச் சுத்தமாகக் கழுவ வேண்டும். பின் வேலங்குச்சி, ஆலம் விழுது கொண்டு பல்தேய்த்து, அதன்பின் கரிசலாங்கண்ணி கீரைத் தூள் கொண்டு, உள்ளே சிறிது சாறு போகும்படி பல் தேய்த்து வாய் கழுவ வேண்டும்.

3. அதன்பின் கரிசலாங்கண்ணி இலை ஒரு பங்கு, தூதுவளை, முசுமுசுக் கையிலை சேர்ந்த கலவை கால்பங்கு, சீரகம், கால்பங்கு இவற்றை ஒன்றாகச் சேர்த்துப் பொடியாகத் தயாரித்து வைத்துக்கொண்டு, அந்தப் பொடியில் ஒரு கிராம் எடுத்துத்தண்ணீரில் சேர்த்துக்கொதிக்கவைக்க வேண்டும். ஒரு டம்ளர் அளவு தண்ணீரைக் கொதிக்க வைக்கலாம். அத்துடன் ஒரு டம்ளர் பாலையும் சேர்த்துக் கொதிக்க வைத்து, இரண்டு, டம்ளர் திரவம், ஒரு டம்ளராகச் சுண்டியபின், அதில் நாட்டுச்சர்க்கரை கலந்து சாப்பிடவேண்டும்.

4. காலை வெயில் உடல்மேல் படாதவண்ணம் மேற்சட்டை அணியவேண்டும்.

5. ஒன்றரை மணி நேரம் கழித்து, வெயிலில் மிதமான உடற்பயிற்சிகள் செய்ய வேண்டும். பின், இளம் வெந்நீரில் குளிக்க வேண்டும். சற்று நேரம் கடவுளை வணங்க வேண்டும்.

6. பசி எடுத்தவுடன் சாப்பிட வேண்டும். சாப்பிடும்போது அள்ளிப் போட்டுக் கொள்ளக் கூடாது மிக நிதானமாகவும் (சோம்பேறித்தனத்துடன்) உண்ணக்கூடாது. சாப்பிட்டப்பின் ஒரு டம்ளர் வெந்நீர் அருந்தவேண்டும்.

7. கிழங்கு வகைகளை உண்ணக்கூடாது. ஆனால், கருணைக்கிழங்கை உண்ணலாம். பேயன் வாழைப்பழம், ரஸ்தானி, வாழைப்பழம் ஆகியவற்றை உட்கொள்ளலாம். பதார்த்தங்களில் புளி, மிளகாய் ஆகியவற்றைக் குறைவாகவும் மிளகு, சீரகம் ஆகியவற்றை அதிகமாகவும் சேர்க்க வேண்டும். கடுகு சேர்ப்பது அவசியமல்ல. உப்பைக் குறைவாகச் சேர்த்துக் கொள்வது உடல்நலத்துக்கு நல்லது தாளிப்பதற்கு நல்ல எண்ணெய் உபயோகிக்கலாம். அல்லது பசு வெண்ணெயால் தாளிக்கலாம்.

8. கத்திரிக்காய், வாழைக்காய், அவரைக்காய், முருங்கைக்காய், பீர்க்கங்காய், பூசணிக்காய், புடலங்காய், கொத்தவரைக்காய் இவற்றை கறி செய்வதற்கு உபயோகப்படுத்தலாம். முருங்கை, கத்தரி, பேயன் வாழைக்காய் ஆகியவற்றை அடுத்தடுத்து கறி செய்யலாம். மற்றவற்றை எப்போதாவது பயன்படுத்த வேண்டும்.

9. சர்க்கரைப் பொங்கல், புளியோதரை, தயிர்ச்சோறு போன்ற சித்திரான்னங்களை அடிக்கடி சாப்பிடக்கூடாது. எப்போதாவது சாப்பிடலாம்.

10. புளித்த தயிர் சேர்த்துக்கொள்ளலாம்.

11. பருப்பு வகைகளில் துவரம்பருப்பை அடிக்கடி சேர்த்துக்கொள்ளலாம் மற்ற பருப்பு வகைகளை எப்போதாவது சேர்த்துக்கொள்ளலாம்.

12. விருந்து உணவு என்றாலும், சற்றுக் குறைவாகவே புசிக்க வேண்டும்.

13. வெந்நீரையே குடிக்க வேண்டும்.

14. மாலை வெயில் உடலில்படுமாறு சற்று உலாவ வேண்டும். காற்று அதிகமாக இருந்தால் உலாவக் கூடாது. கடும் வெயில், பனி, மழை இவை தேகத்தில் படுமாறு உலவக்கூடாது.

15. இரவின் தொடக்கத்தில் முகம், கை, கால் ஆகியவற்றைக் கழுவிச் சுத்தம் செய்துகொள்ள வேண்டும். பின் தியானம் செய்யலாம். மந்திரங்கள் சொல்லிக்கடவுளை வணங்கலாம். புத்தகங்களைப் படிக்கலாம். வீட்டு விவகாரங்களைப் பற்றிப்பேசலாம்.

16. பிறகு இரவு உணவு பகல் உட்கொண்டதில் அரைப்பங்கு அளவே இரவு உண்ண வேண்டும்.

17. இரவில் கீரை, தயிர் மற்றும் உடலுக்குக் குளிர்ச்சி தரும் உணவு வகைகளைச் சேர்க்கக்கூடாது. இரவில் சூடான பதார்த்தங்களையே உண்ண வேண்டும்.

18. இரவுச்சாப்பாடு முடிந்து இரண்டு மணி நேரத்துக்குப் பின் பசும்பாலைக் காய்ச்சிக் குடிக்க வேண்டும்.

19. பெண்களுடன் உறவு கொள்ளும் நாட்களில், உறவு செய்வதற்கு அரைமணி நேரம் முன்னிருந்து உடலுறவைப் பற்றி எண்ணாமல், அதன்பின்உறவு, கொள்ள வேண்டும். ஒருமுறைக்கு மேல் உடலுறவு வைத்துக்கொள்ளக்கூடாது ஒரே இரவில்.

20. உடலுறவு முடிந்தபின் உடலைத் தூய்மைப்படுத்திக்கொண்டு கடவுளைத் தியானம் செய்து பின் உறங்க வேண்டும். நான்கு நாட்களுக்கு ஒரு முறை உடலுறவு வைத்துக்கொள்வது அதர்மம். எட்டு தினங்களுக்கு ஒருமுறை என்றால் மத்திமம். பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை என்றால் உத்தமம்.

21. படுக்கும்போது இடதுகைப் பக்கமாகவே உறங்க வேண்டும். அதிகபட்சம் நான்கு மணி நேரத்துக்குமேல் உறங்கக்கூடாது.

22. கொலை, கோபம், சோம்பல், பொய், பொறாமை, கடுஞ்சொல், போன்றவை கூடாது.

23. உரத்துப்பேசுதல், வேகமாக நடத்தல், ஓடி நடத்தல், வழக்குப் போடுதல், சண்டையிடுதல் போன்றவை கூடாது.

24. பதற்றம் மிகுந்தால் பிராணவாயு அதிகமாகச் செலவாகும். எனவே, பதற்றம் கூடாது.

25. நான்கு நாட்களுக்கு ஒருமுறை நல்லெண்ணையைத் தலையில் தேய்த்துக்கொண்டு வெந்நீரில் குளிக்க வேண்டும். அல்லது, வாரத்துக்கு ஒருமுறையாவது காய்ச்சிய நல்லெண்ணையைத் தலையில் தேய்த்துக்கொண்டு முழுக வேண்டும்.

26. புகை, கஞ்சா, கள், சாராயம் போன்றவை கூடாது.

27. மூன்று மாதத்துக்கு ஒருமுறை அல்லது ஆறு வாரத்துக்கு ஒருமுறை பேதிக்கான மருந்தை உட்கொள்ள வேண்டும். ●

# தமிழைப் பயன்படுத்துவோம்!

பஞ்சாங்கம் – ஐந்திறம்
அங்கத்தினர் – உறுப்பினர்
சந்தா – உறுப்பினர் கட்டணம்
இலாக்கா – துறை
பண்டிகை – திருவிழா
கேணி – கிணறு
அச்சன் – தந்தை
ஆய் – தாய்
மகசூல் – விளைச்சல்
வாடிக்கை – வழக்கம்
அல்வா – இனிப்புக்களி
பாழி – ஆள்
நபர் – ஆள்
எராளம் – மிகுதி
குசினி – சமையலறை
பந்தோபஸ்து – பாதுகாப்பு
ஜலம் – நீர்
வருடம் – ஆண்டு
பட்சி – பறவை
சங்கதி – செய்தி
விவாகம் – திருமணம்
பட்டாளம் – படைப்பிரிவு
உத்தரவு – கட்டளை
உபயோகம் – பயன்
அதிபர், நாயகர் – தலைவர்
உற்சாகம் – ஊக்கம்
அந்நியர் – அயலார்
கவனம் – கருத்து
ஜாதகம் – பிறப்பியம்
மன்னித்துக்கொள் – பொறுத்துக்கொள்
அபிசேகம் – குடமுழுக்கு நீராட்டு
கிராமம் – சிற்றூர்
அபூர்வம் – புதுமை
குமாரன் – புதல்வன்
அர்த்தம் – பொருள்
கோபம் – சினம்
அலங்காரம் – ஒப்பனை
விஞ்ஞானம் – அறிவியல்
அவசரம் – விரைவு
விரதம் – நோன்பு
அனுமதி – இசைவு
சந்தா – கட்டணம்
ஆரம்பம் – தொடக்கம்
ஜாதி – இனம்
சங்கம் – மன்றம்
இருதயம் – நெஞ்சு
சந்தேகம் – ஐயம்
பயம் – அச்சம்

# இந்திய அச்சுக் கலையின் தந்தை

# என்றீக்கே என்றீக்கசு



விசவனூர் வே. தளபதி

ஐரோப்பா கண்டத்தில் இருந்து தமிழ்நாடு வந்து, முதன் முதலாகத் தமிழ் கற்றுக் கொண்டவர் என்றீக்கே என்றீக்கசு அவர்கள். இந்தியாவிலேயே முதன் முதலில் அச்சு நூல்களை வெளியிட்டவரும் இவரே. இந்தியா வில் உள்ள மொழிகளில், முதன் முதலில் அச்சேற்றப் பட்ட மொழி தமிழ் மொழிதான். முதன்முதலாக ஓலைச்சுவடிகளைச் சேகரித்தவரும் இவரே, இவர் சேர்த்து வைத்த ஓலைச்சுவடிகளால்தான் பழந்தமிழ் இலக்கியங்கள், இலக்கணங்கள் நமது பயன்பாட்டிற்கு கிடைத்தன. ஏராளமான முதன் முதல் என்ற பதத்திற்கு, தமிழோடு, அன்றிக் அடிகளாரும் சேர்ந்தே பயணிக் கிறார்.

போர்ச்சுக்கல் நாட்டில் உள்ள விலாவிகோசா என்னும் ஊரில் என்றீக்கே என்றீக்கசு 1520ஆம் ஆண்டு பிறந்தார். சமய வாழ்வில் பெரிதும் நாட்டம் கொண்டு பிரான்ஸ்சிகன் துறவறச் சபையில் சேர்ந்தார். இவருடைய மூதாதையர் யூத மரபைச் சேர்ந்தவர்கள் என்பதால் சபையில் இருந்து நீக்கப்பட்டார். 'கோய்ம்ப்ரா' பல்கலைக்கழகத்தில் 1545ஆம் ஆண்டு திருச்சபைச் சட்டப்படிப்பை நிறைவுசெய்தார்.

அப்போது தோற்றுவிக்கப்பட்ட யேசு சபையில் தன்னை இணைத்துக் கொண்டார். 1546ஆம் ஆண்டு குரு பட்டம் பெற்று, இதே ஆண்டு ஏப்ரல் இருபத் தாறாம் நாள் சவேரியாரிடம் செல்ல அனுமதிக்கப் பட்டு இந்தியாவிற்கு பயணமானார். இவருடன் இருபத்தியாறு யேசு சபைக் குருக்களும் இந்தியாவிற்கு புறப்பட்டனர்.

என்றிக்கே என்றிக்கசு அவர்கள் குழுவினருடன் 17. 9. 1546 அன்று இந்தியாவிலுள்ள கோவா என்ற கடற்கரை நகரத்திற்கு வந்து சேர்ந்தனர். அக்காலத்தில் மலாக்காவில் இருந்த சவேரியார், என்றிக்கசு அவர் களை, முத்துக்குளித்துறையின் தலைமைக் குருவாக இருந்த, அந்தோணி கிரிமினாலி அவர்களிடம் அனுப்பி வைத்தார்.

அவர் புன்னைக் காயலையும் அதனைச் சுற்றியுள்ள ஊர்களிலும் சமயப்பணி செய்யும் பொறுப்பை என்றிக் கசுக்குக் கொடுத்தார். புன்னைக்காயலுக்கு வந்தவுடன் இங்குள்ள தமிழ் மக்களிடம் கலந்து பழகுவதற்கு, தமிழ் மொழி மிக இன்றியமையாதது என்பதை புரிந்து கொண்டு தமிழைப் படித்தார் என்றிக்கசு. எழுதுவதி லும், பேசுவதிலும் விரைவாகவே தேர்ச்சி பெற்றார். ஐரோப்பாக் கண்டத்தில் இருந்து வந்தவர்களில் முதலில் தமிழ் கற்றவரும், தமிழில் புலமை பெற்ற வரும் இவரே ஆவார். சில ஆண்டுகளில் கிரிமினாலி இறந்து போகவே, 1549ஆம் ஆண்டு என்றிக்கசு தலைமைக் குருவானார். மக்களோடு மக்களாக தமது தொண்டினைத் தொடர்ந்ததால், தமிழ் மக்கள் இவரை, மிகவும் அன்பாக அண்ட்ரிக் அடிகளார் என்று அழைத்தனர்.

கோன்சால்வசு என்பவர் அச்செழுத்துக்களை வெட்டுவதில் கை தேர்ந்த கலைஞர். அக்கலைஞரின் உதவியைப் பெற்று, தமிழ் மொழி எழுத்துக்களுக்கான அச்சுகளை முதன்முதலாக உருவாக்கினார் அண்ட்ரிக் அடிகளார். தமிழ் எழுத்துருக்களையும் அச்சு இயந்திரத்தையும் கொண்டு, தாம் கற்ற தமிழில் புலமை பெற்ற, என்றீக்கே என்றீக்கசு அவர்கள், 'தம்பிரான் வணக்கம்' என்ற நூலை 1578ஆம் ஆண்டு அச்சேற்றினார். இதன் மூலம் முதன்முதலில் இமயமலைக்கும் குமரிமுனைக்கும் இடைப்பட்ட நிலப்பரப்பில் நூலை அச்சேற்றியவர் என்ற பெருமையை தனதாக்கிக் கொண்டார். 'டாக்ட்ரினா கிறிஸ்டம்' என்னும் தலைப்பில், போர்த்துக்கீசிய பாதிரியார் 'மார்க்கோசி சொரிசி' எழுதிய நூலின் தமிழாக்கமே தம்பிரான் வணக்கம்.

இந்த நூலை மொழி பெயர்க்கும் பணியில் அடிகளாருக்கு பீட்டர் மானுவேல் என்பவர் மிகவும் உதவியாக இருந்துள்ளார். இந்நூல், அடிகளார் பணியாற்றிய முத்துக்குளித்துறைப் பகுதியில் வாழ்ந்த, பரதவர்கள் பேசும் பேச்சு வழக்கிலேயே மொழி பெயர்க்கப் பட்டுள்ளது. இந்நூல் உருவாவதற்கு அங்குள்ள பரதவ மக்கள் நிதியுதவி செய்துள்ளனர் என்கிறது வரலாறு.

'தம்பிரான் வணக்கம்' நூல் அச்சேறிய நாள், 1578ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் இருபதாம் நாள் என்று அந்த முதல் தமிழ்ப் புத்தகம் பறை சாற்றுகிறது. 'தம்பிரான் வணக்கம்' நூலை தமிழகத்தில் மட்டுமல்லாது போர்த்துக்கீசு நாட்டின் லிசிபனிலும் வெளியிட்டார். அதன் பிறகு அதே ஆண்டில் 'கொம பெசயனாயரு' என்ற நூலையும் அச்சேற்றினார். 1579 ஆம் ஆண்டு 'கிரிசித்தியானி வணக்கம்' என்ற நூலை அச்சேற்றினார். ஐரோப்பியத் தமிழ் இலக்கண நூல் ஒன்றையும் அடிகளார் இயற்றியுள்ளார். இதற்கு 'மலபார் இலக்கணம்' என்று அண்ட்ரிக் அடிகளார் பெயரிட்டுள்ளார்.

கையெழுத்துப்படியாக இருந்த இந்த நூலை 1954ல் லிஸ்பன் நகர தேசிய நூலகத்தில், சேவியர் தணிநாயக அடிகளார் கண்டெடுத்தார். 1982ல் ஹான்ஸ் ஜெ. பெர்மீர் என்பவர் ஆய்வுப் பதிப்பாக இதை வெளியிட்டார். ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் இந்நூலின் படி ஒன்று காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கிறது. எழுத்தறிவில் இப்போதுள்ள கேரள மக்கள், இந்திய நாட்டில் முதலிடம் வகிப்பதற்குக் காரணம் தம்பிரான் வணக்கம் என்றால் அது மிகையல்ல. தற்போதுள்ள தமிழ்நாட்டு எல்லைக்கு வெளியே உள்ள கொல்லத்தில் அச்சடிக்கப் பட்ட முதல் தமிழ் நூல் தம்பிரான் வணக்கம்.

தமிழக எல்லைக்குள்ளேயே, தமிழில் அச்சடிக்கப் பட்ட நூலும் அண்ட்ரிக் அடிகளாருடையதே. அந்நூலின் பெயர் 'அடியார் வரலாறு' இந்நூல் 1586ஆம் ஆண்டு, தூத்துக்குடி மாவட்டம் புன்னைக் காயலில் அச்சடிக்கப்பட்டது. புன்னைக்காயல்தான் தமிழகத்தின் முதல் அச்சகத்தைத் தந்த சிறப்பிற்குரிய ஊர்.

அண்ட்ரிக் அடிகளார் செய்த அச்சுப்பணியின் காரணமாகவே, அவர், இந்திய அச்சுக்கலையின் தந்தை என்று போற்றப்படுகிறார். கிறித்தவ சமயத் தொண்டு, தமிழ்த்தொண்டு இவை இரண்டோடு நில்லாது, மக்களின் நலன் சார்ந்த தொண்டுகளையும் செய்ய ஆரம்பித்தார். தாம் வசித்த இடத்தில் இருந்த மக்களின் உதவியோடு ஒரு மருத்துவமனையை முத்துக் குளித்துறையில் ஏற்படுத்தினார்.

1567ஆம் ஆண்டு புன்னைக் காயலில் தமிழ்க் கல்லூரியைத் தொடங்கி அதன் இயக்குநராகவும் ஆசிரியராகவும் பணியாற்றினார். அவர் சென்ற இடங்களில் எல்லாம் பொதுமக்கள் அவரை அன்போடு வரவேற்றனர். அவரைத் தங்களது உறவினராகவே எண்ணத் தொடங்கினர். 1600ஆம் ஆண்டு பெப்ருவரித் திங்கள் இருபத்து இரண்டாம் நாள், தனது எண்பதாவது வயதில் புன்னைக்காயலில் அண்ட்ரிக் அடிகளார் உயிர்நீத்தார். தூத்துக்குடி பனிமயமாதா கோவிலில் அவரை அடக்கம் செய்வதற்காக, அவருடைய உடல் தோணியில் கொண்டு சென்ற போது அவ்வுடலுடன், ஏழு தோணிகளில் ஆட்கள் சென்றதாக வரலாறு கூறுகிறது. அவருடைய உடலை தங்களுடைய ஜெபமாலையில் தொட்டு, அவற்றை நினைவுச் சின்னமாக வைத்துக் கொள்ள, அலைமோதிய கூட்டத்தை விலக்கி, உடலை கரைக்கு கொண்டு செல்வதற்குப் படாதபாடு பட்டதாக அவரது வாழ்க்கை வரலாறு இயம்புகிறது.

கிறித்தவர்கள் மட்டுமின்றி, இந்துக்களும், முகம்மதியர்களும் கூட அடிகளாரிடம் மிகுந்த அன்பும் மரியாதையும் கொண்டிருந்தனர். இன்றும்கூட புன்னைக் காயலில் சத்தியப் பிரமாணம் செய்யும்போது அண்ட்ரிக் பெயரில் வாக்குறுதி அளிப்பதைக் காண முடிகிறது என்றால், தமிழ் மக்களின் நன்றியுணர்விற்கு இணையேதும் இவ்வுலகில் இல்லை என்பதே உண்மை. •


**'தம்பிரான் வணக்கம்' நூல் அச்சேறிய நாள், 1578ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் இருபதாம் நாள் என்று அந்த முதல் தமிழ்ப் புத்தகம் பறை சாற்றுகிறது. 'தம்பிரான் வணக்கம்' நூலை தமிழகத்தில் மட்டுமல்லாது போர்த்துக்கீசு நாட்டின் லிசிபனிலும் வெளியிட்டார்.**

# கடலோர காவல் படை அணிவகுப்பு வழி நடத்திய தமிழக பெண் அதிகாரி

டெல்லியில் நடக்கும் குடியரசு தின விழா அணி வகுப்பில் கடலோர காவல் படையின் அணிவகுப்பை முதல் முறையாக தமிழகத்தைச் சேர்ந்த பெண் அதிகாரி தேவிகா வழிநடத்திச் சென்றார்.

நாட்டின் 71வது குடியரசு தினம் 26ஆம் நாள் டெல்லியில் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. விழாவையொட்டி ராஜபாதையில் அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பு நடைபெறும். மத்திய, மாநில அரசுகள் சார்பில் இந்திய காலச்சார சிறப்பை விளக்கும் அலங்கார ஊர்திகளும் இந்த அணிவகுப்பில் பங்கேற்றன. மேலும் வெளிநாட்டு விருந்தினரை கவரும் வகையில் ராணுவ வீரர்களின் அணிவகுப்பு மற்றும் சாகசங்களும் இடம் பெற்றன.

இதில் இராணுவ வீரர்களின் அணிவகுப்புக்கு தலைமையேற்று வழி நடத்திச் செல்லும் அதிகாரி களுக்கு என்றுமே தனி மரியாதை எப்போதுமே உண்டு. இந்த ஆண்டு இப்பெருமையை தமிழகத்தைச் சேர்ந்த பெண் காண்டன்ட் அதிகாரி தேவிகா என்ப வரும் பெற்றிருக்கிறார். இவர், குடியரசு தின விழாவில் 120 வீரர்கள் பங்கேற்கும் கடலோர காவல் படையி னரின் அணிவகுப்பை தலைமை ஏற்று வழி நடத்திச் சென்றார். தமிழகத்தில் இருந்து இச்சிறப்பைப் பெற்ற முதல் பெண் இவர்தான் என்பது குறிப்பிடத்தக்கது.



தேவிகா, பொள்ளாச்சி அருகேயுள்ள மடத்துக் குளத்தைச் சேர்ந்த டி.செல்வராஜ் பத்மாவதி தம்பதி யினரின் மகள் ஆவார். திண்டுக்கல்லில் உள்ள தனி யார் பொறியியல் கல்லூரியில் என்ஜினீயரிங் படிப்பை முடித்தவர். இவரது தங்கை ராதிகா தற்போது சட்டக் கல்வி படித்து வருகிறார். 28வயது தேவிகா கடற்படை அதிகாரிகள் பயிற்சி மையம் மற்றும் கேரள மாநிலம் கண்ணூரில் உள்ள ஆசியாவின் மிகப்பெரிய 'எழில் மலா' கடற்படை பயிற்சி மையத்தில் ஆறு மாதம் பயிற்சி பெற்றவர். மேலும் கடற்படைப் பிரிவில் ஓராண்டு துணை பயிற்சியும் பெற்றுள்ளார்.

கடந்த 2016ஆம் ஆண்டு கடலோர காவல் படை யில் பணியில் சேர்ந்தார். தனிகரற்ற தனது திறமையால் குறுகிய காலத்தில் முன்னேற்றம் கண்ட தேவிகா அந்தமான் போர்ட் பிளேர் நகரில் உள்ள பிராந்திய கடலோர காவல் படையில் உதவித் தலைமை கமாண்டன்ட் அதிகாரியாக பணியாற்றினார். தற்போது குசராத்தில் ஓகா நகரில் உள்ள மேற்கு கடலோரக் காவல் படையில் பணியாற்றி வருகிறார். பாகிஸ்தானியர்களின் ஊடுருவல் பகுதி என்பதால் மிகவும் விழிப்புடன் பணியாற்றும் பொறுப்பு இவருக்கு உள்ளது.

கடலோரக் காவல் படைப் பணியில் ஆண் அதிகாரிகள் செய்யக்கூடிய சவாலான பணிகளையும் செய்து அவர்களுக்கு சரிநிகராக பணியாற்றி வருகிறார். சமூக சேவையில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். போர்ட் பிளேரில் இருந்து பல மைல் தூரத்தில் உள்ள கார் நிக்கோபார், காம்பபெல், கச்சல், கமோர்டா போன்ற இடங்களில் கிராமங்களில் வாழும் பெண் குழந்தைகளுக்கு கல்வி போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

கடலோரக் காவல் படையில் உதவித் தலைமை கமாண்டன்ட் அதிகாரியாக பணியாற்றி வரும் தேவிகா புதிய சமுதாயம் படைக்கும் பெண்களுக்குச் சிறந்த உதாரணமாகத் திகழ்கிறார்.



# மருத்துவ குணம் உடைய தமிழ் மண்ணின் அரிசி வகைகள்

1. கருப்பு கவுணி அரிசி
புற்றுநோய் வராது. இன்சுலின் சுரக்கும். மன்னர்கள் சாப்பிட்ட அரிசி.

2. மாப்பிள்ளை சம்பா அரிசி
நரம்பு, உடல் வலுவாகும். ஆண்மை கூடும்.

3. பூங்கார் அரிசி
சுகப்பிரசவம் ஆகும். தாய்ப்பால் ஊறும்.

4. காட்டுயானம் அரிசி
நீரிழிவு, மலச்சிக்கல், புற்று சரியாகும்.

5. கருத்தக்கார் அரிசி
மூலம், மலச்சிக்கல் போன்றவை சரியாகும்.

6. காலாநமக் அரிசி
மூளை, நரம்பு, இரத்தம், சிறுநீரகம் சரியாகும்.

7. மூங்கில் அரிசி
மூட்டுவலி, முழங்கால் வலி சரியாகும்.

8. அறுபதாம் குறுவை அரிசி
எலும்பு சரியாகும்.

9. இலுப்பைப்பூ சம்பா அரிசி
பக்கவாதத்திற்கு நல்லது கால்வலி சரியாகும்.

10. தங்கச்சம்பா அரிசி
பல், இதயம் வலுவாகும்.

11. கருங்குறுவை அரிசி
இழந்த சக்தியை மீட்டுத்தரும். கொடிய நோய்களையும் குணப்படுத்தும்.

12. கருடன் சம்பா அரிசி
இரத்தம், உடல், மனம் சுத்தமாகும்.

13. கார் அரிசி
தோல் நோய் சரியாகும்.

14. குடை வாழை அரிசி
இரும்புசத்து, சுண்ணாம்பு சத்து அதிகம்.

15. கிச்சிலி சம்பா அரிசி
இரும்புச்சத்து, சுண்ணாம்பு சத்து அதிகம்.

16. நீலம் சம்பா அரிசி
இரத்த சோகை நீங்கும்.

17. சீரகச் சம்பா அரிசி
அழகு தரும். எதிர்ப்பு சக்தி கூடும்.

18. தூய மல்லி அரிசி
உள் உறுப்புகள் வலுவாகும்.

19. குழியடிச்சான் அரிசி
தாய்ப்பால் ஊறும்

20. சேலம் சன்னா அரிசி
தசை, நரம்பு , எலும்பு வலுவாகும்.

21. பிசினி அரிசி
மாதவிடாய், இடுப்பு வலி சரியாகும்.

22. சூரக்குறுவை அரிசி
பெருத்த உடல் சிறுத்து அழகு கூடும்.

23. வாலான் சம்பா அரிசி
சுகப்பிரசவம் ஆகும். பெண்களுக்கு அழகு கூடி இடை மெலியும். இடுப்பு வலுவாகும். ஆண்களுக்கு விந்து சக்தி கூடும்.

24. வாடன் சம்பா அரிசி
அமைதியான தூக்கம் வரும்.

•

# கரம் சேர்ப்போம்!

மருத்துவ சமுதாயத்தினர்
அரசருக்கும் மக்களுக்கும்
வைத்தியம் பார்த்தார்கள்
பல அரசர்களுக்கு
அறிவுரை வழங்கினார்கள்.

எங்கிருந்தோ வந்த
ஆரியனால்
அரசவையில் இருந்து
வெளியேற்றப்பட்டார்கள்.

ஆலயத்தில்
மருத்துவ சமுதாய
முன்னோர்கள்
வழிபாடு செய்தார்கள்
கைபர் வழியாய்
வந்த ஆரியன்
செய்தான் சூழ்ச்சி
மருத்துவ சமுதாயத்தினர்
அங்கிருந்தும் வெளியேற்றப்பட்டனர்.

தமிழகத்திலும் வளர்ந்தான் ஆரியன்
மத்தியிலும் மாநிலத்திலும்
முதன்மையாய் ஆகிவிட்டான்
அவனை அகற்ற இயலாமல்
கிடக்கின்றன பல சமுதாயங்கள்.

மருத்துவ சமூகத்தினரும்
படித்தவர்கள்தானே
வேலையில் அமர வைக்க
யாரும் இல்லையே!
நாங்களும் இந்நாட்டு
குடிகள்தானே
படிப்புக்கேற்ற வேலையின்றி
முடக்கி வைத்த வேடிக்கை
பார்க்கின்றன பிற சமூகங்கள்.

முடியை திருத்தும்
சமூகத்தின் வாழ்க்கை
திருத்தப்படாத முடிவுகளாக
தொடர்வதேனோ?

**வாணியம்பாடி**
**தியாகராசன்**
9962082032

# கிளிமொழி

சொன்னதைச் சொல்லுமாம் கிளி
என் வீட்டு கிளி மீனாட்சி
அக்கா அக்கா வெனகற்பித்தால்
சொக்கா சொக்கா வெனகூறுதே
தன் நாதன் சொக்கரைஅழைக்கு தோ
தன் மேனிக்கு சொக்காய் கேட்குதோ
கிளிமொழி புரியலியே!

ஆதங்கஅம்சவள்ளியே
அலைபேசி பேச்சில்
அன்னை அருகிருக்க
பத்மா பத்மாவெனஅழைப்பது
தோழிபத்மாவதியா
காதலன் பத்மநாபனா
கிளிக்கு மே புரிய லியாம்!

– கவிஞர். இளந்தேவன்.

# இலங்கைத் தமிழர்களுக்கு குடியுரிமை இல்லை?

இலங்கையில் நடந்த உள்நாட்டுப் போரால் அங்கிருந்து ஏராளமான தமிழர்கள், தமிழகத்துக்கு இடம் பெயர்ந்தார்கள். அவர்கள் தற்போது பல்வேறு அகதிகள் முகாம்களில் வசித்து வருகிறார்கள்.

இந்த நிலையில் நடுவண் அரசு புதிய குடியுரிமை திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்துள்ளது. இந்தச் சட்டத்தால் இலங்கைத் தமிழர்கள் தமிழகத்தில் வசிக்க முடியாத நிலை ஏற்படும் என்றும், எனவே அவர்களுக்கு இரட்டை குடியுரிமை வழங்க வேண்டும் என்றும் அரசியல் கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன.

தமிழக முதல் அமைச்சர் எடப்பாடி பழனிசாமியும் நடுவண் உள்துறை அமைச்சர் அமித்சாவிடம் கோரிக்கை விடுத்தார்.

இந்த விவகாரம் தொடர்பாக 522020 அன்று நாடாளுமன்ற மாநிலங்களவையில் புதுச்சேரி அதிமுக எம்பி கோகுலகிருஷ்ணன் கேள்வி எழுப்பினார். அக்கேள்விக்கு பதில் அளித்த நடுவண் உள்துறை இணை அமைச்சர் நித்யானந்த்ராய் “அரசியல் அமைப்பு 9 இன் கீழ் இரட்டை குடியுரிமை வழங்கு வதற்கு ஒப்பந்தம் செய்யும் திட்டம் ஏதும் இல்லை“ என்று தெரிவித்தார்.

# விடியலைக் காண விழித்தெழுவோம்!

விடியலைப் பார்க்க விழித்தெழுவோம்
விண்கோள் சென்று கால்பதிப்போம்
இடியெனத் தடைகள் எதிர்வரினும்
இலட்சியப் பயணம் தொடர்ந்திடுவோம்
கொடிதனை ஏற்றி நமதாக்குவோம்
கோள்களை நமது நாடாக்குவோம்
அடிமைகள் அல்லவெனப் பறைசாற்றுவோம்
அனைத்தும் முடியுமென நிறைவேற்றுவோம்.


சந்திரனில் கால்பதித்து மண்ணெடுப்போம்
சாதனையாய்ச் செவ்வாயில் வீடமைப்போம்
எந்தவொரு நாட்டிற்கும் அடிபணியோம்
இணைந்து நின்று செயல்பட்டால் அரவணைப்போம்
சொந்தமாக முயன்றுநாமும் வெற்றிபெறுவோம்
சுதந்தரமாய்ச் செயல்முடித்துச் சுற்றிவருவோம்
இந்தியாவின் திறமையென நிலைநிறுத்துவோம்
இளைஞர்களை இயங்கவைத்து வழிநடத்துவோம்.

புதனுக்கும் வெள்ளிக்கும் பாலமிடுவோம்
பொழுதுபோக காலாற நடந்துவருவோம்
இதமாகச் சென்றுவர கலம் அமைப்போம்
இரவுநேர ஓய்வுக்கு இல் அமைப்போம்
நிதமொரு புதுமையொடு கோள்விடுவோம்
நிலவரங்கள் கண்டறியும் கருவி வைப்போம்
மிதந்துவந்த சுனிதாவிடம் கைகுலுக்குவோம்
மெல்லமெல்லப் புலம்பெயர்ந்து நாம் செல்வோம்

இயற்கைநிலை மாற்றங்களை எளிதிலறிவோம்
ஏற்றவாறு கணித்து நாமும் விழிப்புறுவோம்
செயற்கைக்கோள் பலவிடுத்து தெளிவுபெறுவோம்
சிந்தனையைப் புதுவழியில் செயல்படுத்துவோம்
தயக்கமிலாச் சாதனையாய் நாம்படைப்போம்
தாரகையில் கால்பதிக்க முயன்றுபார்ப்போம்
மயக்கத்தில் இருந்துநாமும் விடுபடுவோம்
மறுஉலகம் சென்றுநாமும் குடியேறுவோம்

**கவிஞர் இராமன்**

# டிராபிக் ராமசாமி மனு!



சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி கடந்த சில மாதங்களுக்கு முன்பு வழக்கு தாக்கல் செய்பவர்கள் தானாகவே வழக்கறிஞர் இல்லாமல் வாதாடுவது குறித்த புதிய விதிமுறைகளை அறிவித்தார். இந்த விதிமுறைகளால் என்னைப் போல பொதுநல வழக்குத் தொடருபவர்கள் கடுமையாக பாதிக்கப்படுவர்.

மேலும், அந்த விதிமுறைகளில் நிறைய குறை பாடுகள் உள்ளன. இதுபோன்ற விதிமுறைகளை விதிப்பதற்கு உயர்நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை. இந்த விதிமுறைகள் அரசியல் அமைப்புச் சட்டத்துக்கு எதிரானதாக உள்ளது. எனவே இந்த விதிமுறைகளை ரத்து செய்ய வேண்டும் என்று டிராபிக் இராமசாமி மனு கொடுத்திருந்தார்.

இதேபோல மனுதாரர்களே வாதாடுவதற்கான புதிய விதிமுறைகளை ரத்து செய்ய வலியுறுத்தி வேறு சிலரும் மனுத்தாக்கல் செய்திருந்தனர். இந்த மனுக்கள் மதுரை உயர்நீதிமன்ற நீதிபதிகள் துரைசாமி, ரவீந்திரன் அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது.

மனுவை விசாரித்த நீதிபதிகள் இந்த மனுவிற்கு உயர்நீதி மன்ற பதிவாளர் (நிருவாகம்) பதில் அளிக்க அறிக்கை அனுப்பு உத்தரவிட்டு வழக்கை நான்கு வாரங்களுக்கு ஒத்தி வைத்தனர்.

## பெண்ணாக இருந்து ஆணாக மாறியவர் காவல்துறையிடம் தஞ்சம்!

சென்னை வில்லிவாக்கத்தைச் சேர்ந்தவர் ராம் (வயது 26) இவர் பி.எ., பி.எல்., படித்துவிட்டு வழக்கறி ஞராகப் பயிற்சி பெற்று வருகிறார். இவர், பெண்ணா கப் பிறந்தவர். சில ஆண்டுகளுக்கு முன்பு அறுவைச் சிகிச்சை மூலம் ஆணாக மாறியவர்.

இந்த நிலையில் ராமுவுக்கும், அவருடைய வீட்டின் அருகே வசித்து வந்த சரஸ்வதிக்கும் பழக்கம் ஏற்பட்டது. பின்னர் அது காதலாக மாறியது. அவர்கள் கடந்த 2 ஆண்டு களுக்கும் மேலாக தீவிரமாக காதலித்து வந்தனர். இதற்கு சரசுவதியின் பெற்றோர் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

எதிர்ப்பைத் தொடர்ந்து ராமுவும் சரசுவதியும் வீட்டை விட்டு வெளியேறி கோவையை அடுத்த சூலூர் வந்தனர். பினனர் அவர்கள் அங்குள்ள ஒரு கோயிலில் திருமணம் செய்து கொண்டனர். இதை யடுத்து காதல் சோடி பாதுகாப்புக் கேட்டு சூலூர் காவல் நிலையத்தில் (25 சனவரி 2020) அன்று தஞ்சம் அடைந்தது.

அவர்களிடம் காவல்துறையினர் விசாரணை நடத்தினார்கள். இதற்கிடையே சரசுவதியின் தாய், தனது மகளை காணவில்லை என்று வில்லிவாக்கம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தது தெரிந்தது. எனவே, ராம், சரசுவதி இருவரையும் சென்னை வில்லிவாக்கம் காவல்நிலையத்தில் நேர் நிற்குமாறு சூலூர் காவல்துறையினர் அறிவுறுத்தினர். இதை யடுத்து இருவரும் அங்கிருந்து சென்னைக்குப் புறப் பட்டனர்.

●


### விளம்பரக் கட்டண விபரம்

**முன்னட்டை உள்ளே** ரூ. 7,000/- (முழுப்பக்கம்)
**பின்னட்டை உள்ளே** ரூ. 7,000/- (முழுப்பக்கம்)
**பின்னட்டை** ரூ. 10,000/- (முழுப்பக்கம்)
**கருப்புவெள்ளை** ரூ. 5,000/-


## சுதந்திர தினத்திற்கும் குடியரசு தினத்தன்றும் கொடி ஏற்றுவதில் உள்ள வேறுபாடுகள்...



**முதல் வித்தியாசம்**

பதினைந்து ஆகஸ்ட் சுதந்திர தினத்தன்று கொடி ஏற்றும்போது கொடி கீழிருந்து மேலே கயிற்றால் இழுத்து பிறகு கட்டப்பட்டுள்ள கொடி திறக்கப்பட்டு பறக்கவிடப்படும் அன்றைய தினத்திற்கு மரியாதை செய்யும் விதமாக செய்யப்படும் இந்த நிகழ்வுக்கு “கொடியேற்றம்“ அதாவது Flag hoisting என்றழைக்கப் படுகிறது.

இருபத்து ஆறு ஜனவரி மாதம் குடியரசு தினத்தன்று கொடி கம்பத்தின் உச்சியிலே கட்டப் பட்டு இருக்கும். அந்த முடிச்சு அவிழ்க்கப்பட்டு அதாவது கொடி திறக்கப்பட்டு பறக்கவிடப்படும் இதை கொடியை பறக்கவிடுதல் அதாவது flag unfurling என்பார்கள்.

**இரண்டாவது வித்தியாசம்....**

சுதந்திரம் கிடைத்தபோது அரசியல் சட்டம் அமுலுக்கு வரவில்லை. அப்பொழுது பிரதமர் தான் நாட்டில் முதல் மனிதராக political head கருதப் பட்டார். குடியரசுத் தலைவர் ஒரு constitutional monarchy, அவர் அப்போது பதவி பிரமாணம் எடுத்துக்கொள்ள வில்லை. இதனால் சுதந்திர தினத்தில் பிரதமர் கொடி ஏற்றுகிறார். குடியரசுத்தலைவர் மாலையில் ரேடியோ தொலைக்காட்சி மூலமாக உரையாற்றுவார்.

குடியரசு தினத்தன்று அரசியல் சட்டம் அமுலுக்கு வந்தபடியால் அரசியல் சட்டத்தின் தலைவர் மற்றும் பாதுகாவலர் என்ற முறையில் குடியரசுத்தலைவர் கொடியை பறக்கவிடுவார்.

**- டிக்சன்**

அமித்ஷாவின் சாவர்க்கர் பாசம் அகிலம் அறிந்த ஒன்று. அவரது வீட்டில் நிரந்தரமாகவே ஒரு சாவர்க்கர் வரைபடம் உண்டு. எப்போதும், அதன் முன்னால் அமர்ந்தபடிதான், போட்டோவுக்கு போஸே கொடுப்பார் மனிதர்.

ஆக, விஷயம் தெளிவாகிறது. சாவர்க்கரை அதிகாரபூர்வமாக அங்கீகரிப்பதற்கான வேலைகள், வேகமெடுத்துவிட்டன.

ஏற்கனவே, ரூபாய் நோட்டில் சாவர்க்கர் படத்தைப் பொறிக்க வேண்டும் என்ற கோரிக்கை வேறு, பல ஆண்டுகளாக நிலுவையில் இருக்கிறது.

அதுவும் இனி மேலெழுந்து வரக்கூடும். இதன் ஆபத்தை நாம் எந்தளவுக்கு உணர்ந்திருக்கிறோம் என்று தெரியவில்லை. ஏனென்றால், சாவர்க்கருக்கு அளிக்கப்படும் அங்கீகாரம் என்பது, வெறுமனே அவருக்கான அங்கீகாரம் மட்டுமல்ல அது, அவரது கோட்பாட்டுக்கு அளிக்கப்படும் அங்கீகாரமும்கூட.

இந்த நேரத்தில் சாவர்க்கர் யார், அவரது அரசியல் எப்படிப்பட்டது. அவர் பாடுபட்டது யாருக்காக என்பதையெல்லாம் விரிவாகப் பேச வேண்டியது அதி அவசியமாகிறது.

இல்லையென்றால், நாளைக்கு ரூபாய் நோட்டில் காந்திக்குப் பதில் சாவர்க்கர் சிரிப்பதை, வரும் தலைமுறைப் பிள்ளைகள் பார்க்க நேரிடும். அமித்ஷா வேறு, வரலாற்றை மாற்றி எழுதுவோம் என்று பீதி கிளப்பிக்கொண்டிருக்கிறார். ஆகவே, இப்போது பேசுவதுதான் சரி!

சாவர்க்கர் ஒரு சிந்தனைவாதி என்பதில் எவரும் சந்தேகம் கொள்ள வேண்டியதில்லை அவர் சிந்தனை வாதிதான்! ஆனால், அவரது சிந்தனைகள் எதை நோக்கி இருந்தன என்பதுதான் முக்கியமானது. அதையே அதிகம் கவனத்தில் எடுத்து விவாதிக்க வேண்டும். அவரது சிந்தனை என்ன. இந்து ராஷ்டிரம் தான்! அந்த இந்து ராஷ்டிரம் எப்படியிருக்கும்? அவரே அதை விவரிக்கிறார். எவரெல்லாம் இந்து மதத்தைச் சார்ந்தவர்கள் இல்லையோ, அவர்களெல்லாம் இந்தியர்களும் அல்லர்".

ஒரு தேசியத்துக்கு கொடுக்கப்படும் கருத்துருவாக் கங்களைத் தாண்டி, வேறு கருத்துருவாக்கத்தை கொண்டுவந்து வைக்கிறார் சாவர்க்கர். அவரது அந்தத் தத்துவத்தின்படி, இஸ்லாமியர்கள், கிறிஸ்துவர்கள் இந்தியர்கள் அல்லர். ஏனென்றால், அவர்களின் புண் ணியபூமி அரேபியாவிலும் பாலஸ்தீனத்திலும் இருக்கிறது என்பது அவரது வாதம்.

இதைத்தான் 1905 தொடங்கி 1966 வரை வெவ்வேறு வார்த்தைகளில் பேசிக்கொண்டிருந்தார் அவர். அதாவது, அவர் மரணத்தைத் தழுவும் வரை அதிலிருந்து மாறவே இல்லை. கடைசிக்காலங்களில், இஸ்லாமிய ஆட்சியாளர்கள் இந்துப் பெண்களைச் சூறையாடியதைப் போலவே, இந்துக்கள் இஸ்லாமயப் பெண்களைச் சூறையாட வேண்டும் என்று சொல்லும் அளவுக்குக்கூட அவர் இறங்கியிருக்கிறார்.



# சாவர்கர்

மத அடிப்படைவாதத்தில் அவரது மனம் எந்த அளவுக்கு கெட்டித்தட்டிப் போயிருந்தது என்பதற் கான உதாரணம், அந்த வார்த்தைகள்

காந்தி என்ன சொன்னார் என்றால், சாவர்க்கர் அதிலிருந்து அப்படியே வேறுபட்டு என்று சொன் னார். அதாவது, மக்களின் மீது அரசு மேலாதிக்கம் செலுத்துவதை அப்பட்டமாக ஆதரித்தவர் சாவர்க்கர்.

போதாக்குறைக்கு, இந்தியாவை இந்துக்கள் ஆதிக்கம் செலுத்தும் ஒரு ராணுவ தேசமாக உருவகித் தார் சாவர்க்கர். அதனால்தான் அவருக்கு ஜெர்மனி பிடித்தது.

பின்னாளில், இஸ்ரேலும் அவரது மனதைக் கவர்ந் ததற்குக் காரணம் அதுவே. இந்தியாவை காலனியா திக்கத்தின் கண்கள் கொண்டு பார்த்தவர் சாவர்க்கர் என்று சில ஆய்வாளர்கள் சொல்வது, அதனாலேயே!

விவேகானந்தரும் அரவிந்தரும் திலகரும் இந்து யிஸம் என்று பேசியதை இந்துத்துவம் என்ற இடத்துக்கு நகர்த்தியவர் சாவர்க்கர். இந்துயிஸத்தை இந்துமதத்தைப் பின்பற்றுவது அதைப்பற்றி பேசுவது, அதன் தத்துவங்களை பரப்புவது என்று வரையறுக் கலாம்.

ஆனால், இந்துத்துவம் அப்படியல்ல. அது, இந்துக் களை ஒருங்கிணைப்பது, ஒருங்கிணைத்து ஓர் இந்து சமுதாயத்தைக் கட்டமைப்பது! அதாவது, இந்துயிசம் இந்துக்களை ஒரு மதமாகப் பார்த்தால், இந்துத்துவா ஓர் இனமாகப் பார்க்கும். அந்த இனத்தில் ஆதிக்கத்தக் குள் அது தேசத்தைக் கொண்டு வரும். அந்தத் தேசத்தில், சிறுபான்மை இனத்தவர்கள் இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கப்படுவார்கள். அவர்களுக்கென்று எந்த உரிமையும் இருக்காது.

இதை நோக்கியே, அந்த 'Holy land' என்ற பதத்தை வெகு சாதுரியமாகப் பயன்படுத்தினார் சாவர்க் கர்.

இந்தியாவை முழுவதுமாக 'இந்து மயமாக்குவதே' சாவர்க்கரின் நோக்கம். அதற்காகப், படை உருவாக்கு வது, அந்தப் படையை மக்கள் மேல் செலுத்தி அவர் களை ஆளும் அதிகாரத்தை அடைவது, அந்த அதிகா ரத்தின் வழியே, நாடு முழுவதும் ஒற்றைத் தன்மையைக் கொண்டு வருவது என்று, தெளிவாக வரைபடம் வரைகிறார் சாவர்க்கர்.

'Hinduise all politics, Militarize Hinduism' என்ற பதத்தை அவர் அடிக்கடி பயன்படுத்துகிறார். இந்த ஒருங்கிணைத்தலைச் செய்ய அவருக்கு ஒரு எதிர்த் தரப்புத் தேவைப்பட்டது. அதனால்தான், இந்து அல்லாதவர்கள், அதாவது இஸ்லாமியர்களை, கிறித்த வர்களை 'Others' என்று அழைத்து, 'Self' எனப் படும் இந்துக்களின் எதிரிகளாகக் கட்டமைக் கிறார் அவர். ஜைனர்கள், சீக்கிர்கள், பௌத்தர்களைக்கூட அவர் ஓரமாகவே நிறுத்துகிறார். அதுவும், அன்பையும் சமத்த வத்தையும் போதித்த பௌத்தத்தை, இசுலாம், கிறித்தவத்துக்கு இணையாக வெறுக்கிறார்.

அருடைய 'Hindutva : Who is a Hindu' புத்தகம், ஏறக்குறைய கிட்லரின் 'Mein kampf' புத்தகத்துக்கு இணையானது.

சாவர்க்கரின் இந்து இராச்சியத்தின் இன்னொரு ஆபத்து, அது இந்து சமுதாயத்தையே பிளவுபடுத்திப் பார்க்கிறது என்பது. இதற்கு, சாவர்க்கர் அவ்வளவு பெரிய சனாதனவாதியும் அல்ல. கடவுள் நம்பிக் கையும்கூட அவருக்கு குறைவுதான். Agnostic வகை யைச் சேர்ந்தவர். அவரின் மனைவியும் மகனும் இறந்த போது கூட, அவர் மதச்சடங்குகள் ஏதும் செய்ய வில்லை. ஆனால், சாவர்க்கர் கோயில்கள் கட்ட குரல் கொடுத்திருக்கிறார். 1939 இல் டெல்லியில் சிவன் போயில் ஒன்று இடிக்கப்பட்டபோது, அதை எதிர்த்தவர்களுள் சாவர்க்கர் முக்கியமானவர்.

அதில் கிடைத்த வெற்றியைப் பெருமளவில் கொண்டாடியவர் சாவர்க்கர். இது போன்ற நட வடிக்கைகளே இந்து மக்களை ஒருங்கிணைக்கும் என்று அருகிலிருப்பவர்களிடம் சொல்லி மகிழ்கிறார்.

கடவுளையே வணங்காதவர், கோயில் கட்டுமா னங்களை ஏன் ஆதரித்தார் என்பதை முக்கியமாகப் பார்க்க வேண்டும். காரணம் அதுவேதான். அது, அவருக்கு ஓர் அரசியல் ஆயுதம்!

இத்துத்துவத்தின் தந்திரமே அதுதான். அதற்கு, மதம் என்பது மக்களை அடக்கியாளும் ஓர் அரசியல் கருவி மட்டுமே. அதைக் கடந்து யோசிப்பதற்கு இந்துத் துவத்தில் எந்த இடத்தையும் ஏற்படுத்தி வைக்கவில்லை சாவர்க்கர்.

சாவர்க்கரின் இந்து சமுதாயமும் எப்படிப்பட்டது தெரியுமா? உயர்சாதி இந்துக்கள் ஆதிக்கம் செலுத்துவ தாகவே அது இருக்கும். ஏனென்றால், இந்து சமுதா யத்தின் அடித்தளமாக 'வர்ணப் பாகுபாடு' இருக்க வேண்டும் என்று தெளிவாகச் சொல்கிறார் சாவர்க்கர்.

அந்த இந்து சமுதாயத்தின் முக்கிய மொழிகளும் கூட இந்தியும் சமற்கிருதமும்தான். கடவுளர்களும் கூட கிருசுணனும் ராமனுமே. பழங்குடி மக்கள் தங்களின் குலதெய்வத்தைத் துறந்துவிட்டு, ராமவழிப்பாட்டுக்கு மாற வேண்டும்' என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்து கிறார் சாவர்க்கர். 'வறண்டு கிடந்த இந்து மதத்தை, சாதிதான் செழிப்பாக்கியது' என்று சொல்லுபவராகவும் இருந்தார் அவர்.

அவரது தீண்டாமை ஒழிப்பு முழக்கங்கள் எல்லாமே, வெறும் பாவ்லா மட்டுமே. ஆங்கிலத்தில்

'Escapism' என்று அதைச் சொல்வார்கள். வெற்று, தப்பித்தல்வாதம். இது போதாதென்று, கறுப்பு நிறத்தவர்களை இந்துக்களாக ஏற்றுக் கொள்வதிலும் அவருக்கு தயக்கம் இருந்தது.

இந்துப் பெண்களைப் பற்றியும் எங்கும் பெரிதாகப் பேசுவதில்லை சாவர்க்கர். 'அவர்களின் கடமை அடுப்பங்கறை, குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளுதல் மட்டுமே' என்பது சாவர்க்கர் கொண்டிருந்த எண்ணம்.

இத்தகையவரைத்தான், தனது அணிகலனாக இந்தியத் தாய் சூட வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

இவற்றையெல்லாம் விலக்கிவிட்டுப் பார்த்தாலும், அவரை அங்கீகரிப்பதற்கு மூன்று இடையூறுகள் இருக்கின்றன. முதலாவது, அடிமைப்படுத்திய ஆங்கிலேயனிடமே 'நான் உங்கள் சேவகன்' என்று அவர் மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்தார்.

இரண்டாவது, 'இங்கே இரண்டு தேசங்கள் இருக்கின்றன' என்று ஜின்னாவுக்கு பாயிண்ட் எடுத்துக் கொடுத்ததும் கூட அவரேதான்.

மூன்றாவதுதான் மிக முக்கியமானது. அதாவது, தேசப்பிதா காந்தி கொலைக்குத் தூண்டுகோலாக இருந்தார் என்பது வழக்கு. அப்போது 'ஆபத்தான கைதி' என்று அவருக்கு அடையாளம் இடப்பட்டது உண்மைதான். 'ஞி' என்பது அந்த கோட்வேர்ட். ஆனால், சாவர்க்கர் ஒன்றும் அவ்வளவு ஆபத்தானவராக ஆங்கிலேயருக்கு இருக்கவில்லை என்பதுதான் முரண்பாடு.

சாவர்க்கர் 1924க்கு முன்பு மன்னிப்புக் கடிதம் எழுதினார் என்பதுதானே, நாம் அறிந்தது. ஆனால், சிறையில் அடைக்கப்பட்ட சில மாதங்களிலேயே, ஆங்கிலேயருக்கு மன்னிப்புக் கடிதம் எழுத ஆரம்பித்து விட்டார் சாவர்க்கர். 1911 லேயே அவர் ஒரு கடிதம் எழுதினார். அது இப்போது கிடைப்பதில்லை. ஆனால், 1913 அவர் அனுப்பிய மற்றொரு கடிதத்தில் அந்த முந்தைய கடிதத்தைக் குறிப்பிடுகிறார். கடிதத்தில், 'அடிபணிதல்' வாசகங்கள் பளிச்சென்று இருக்கின்றன.

'To : The home member of the government of India' என்று தலைப்பிட்டிருக்கும் அந்தக் கடிதத்தில், "சிறைக் கொடுமைகளை என்னால் தாங்க முடியவில்லை. எண்ணெய் ஆலையில் போட்டு வதைக்கிறார்கள். அரசு கருணை காட்டி என்னை விடுவித்தால், நான் அரசியலமைப்பின் தீவிர ஆதரவாளனாகச் செயல்படுவேன் என உறுதி கூறுகிறேன். எந்தச் சூழ்நிலையிலும் அரசுக்கு சேவகம் செய்ய நான் தயாராக இருக்கிறேன். எங்களுக்கு அன்னையாக இருக்கும் அரசே கருணை காட்டவில்லையென்றால், இந்த மகன் வேறு எங்கே சென்று நிற்பேன்' என்று சொல்கிறார் சாவர்க்கர்.

சாவர்க்கரைப் போலவே, பகத்சிங்கும் ஒரு கடிதத்தை பிரிட்டீசு அரசாங்கத்தக்கு எழுதினார். லாகூர் சிறையில் இருந்து 1931ஆம் ஆண்டு அவர் அனுப்பிய கடிதம் அது. அதில், உங்கள் நீதிமன்றத்தின் தீர்ப்பு, எங்களை போர்க்கைதிகளாக வகைப்படுத்துகிறது. ஆம், நாங்கள் போர்க்கைதிகள்தான். ஆகவே, எங்களை நீங்கள் தூக்கிலிடக்கூடாது. மாறாக, துப்பாக்கித் தோட்டாக்களால் சுட வேண்டும்' என்று, அறிவித்தான் அந்த 23 வயது இளைஞன்.

அடுத்து, 'இந்தப் போர் தொடரும்' என்று அறிவித்து விட்டு, 'எங்களைக் கொல்லப்போகும் இராணுவ அதிகாரிகளை எப்போது அனுப்புகிறீர்கள்' என்ற கேள்வியோடு அந்தக் கடிதத்தை முடிக்கிறார் அவர்.

கடிதத்தில் ஓர் இடத்தில், குறித்துக் கொள்ளுங்கள். முதலாளித்துவம் மற்றும் ஏகாதிபத்தியத்தின் நாள்கள் எண்ணப்படுகின்றன. ஒருநாள் இங்கு, சோசலிச சமுதாயம் மலரும்' என்று கர்ஜிக்கிறான் அந்த மாவீரன்.

கடிதம் முழுவதுமே, அப்படித்தான். அதிகமும் தேசத்தைப் பற்றித்தான் பேசுகிறார் பகத் சிங். இதற்கு லாகூர் சிறையும் ஒன்றும் சொகுசு சிறையல்ல. ஆனாலும், பகத்சிங் அதைப் பற்றியெல்லாம் கவலை கொள்வதில்லை.

உதிரம் முழுவதும் விடுதலை வேட்கை ஓடும் ஒருவனின் வார்த்தைகள் எப்படியிருக்குமோ, அப்படியிருக்கின்றன பகத்சிங்கின் வார்த்தைகள்.

உறைவிட்டெழும் வாளென, நாண் தொட்டுப் புறப்படும் அம்பெனப் பாய்கின்றன, அவர் சொற்கள்!

அப்படியே சாவர்க்கரின் வார்த்தைகளையும் பார்க்கவும். 'நான் இப்படியெல்லாம் கஷ்டங்களை அனுபவிக்கிறேன். கருணை காட்டுங்கள். நல்ல படியாக நடந்து கொள்வேன்' என்றெல்லாம் அந்நியனிடம் பணிகிறார் சாவர்க்கர்.

இவர் எப்படி பாரதத்தின் ரத்தினம் ஆவார்? 'நீங்கள் என்னை விடுவித்தால், இந்தியாவில் உங்கள் புகழ் பெருகும்' என்றெல்லாம்கூட ஆங்கிலேயர்களிடம் உருகியிருக்கிறார் சாவர்க்கர்.

1924இல் அவரது விடுதலைக்குக் காரணமான மன்னிப்புக் கடிதம், இன்னும் உக்கிரமானது. 'என்னை விடுவித்தால் நான் உங்களுக்கு நல்ல சேவகனாக இருப்பேன்' என்று அதில் பட்டயமே எழுதித் தருகிறார் சாவர்க்கர்.

'நான் எவ்வளவு நன்றாக நடந்து கொள்ள முடியுமோ, அவ்வளவு நன்றாக நடந்து கொள்கிறேன்.'

என்றும்கூட வாக்குறுதி அளிக்கிறார். வெளிவந்த பின், அவர் அதைத்தான் செய்தார். சிறையிலிருந்து வெளியே வந்த பிறகுதான் `Hindutva : Who is a Hindu' புத்தகத்தை எழுதினார்.

அது, இந்தியாவை பிரித்தாளத் துடித்துக் கொண்டிருந்த பிரட்டீசாருக்கு ஒரு கையேடாகவே உதவியது. ஜின்னாவுக்கும் அது ரெஃபரன்சாக மாறியது.

1926 இல் சாவர்க்கரைப் பற்றி ஒரு புத்தகம் வெளிவந்தது. அவரது வாழ்க்கை வரலாற்றுப் புத்தகம் அது. பெயர், 'Life of Barrister Savarkar'. அதை எழுதியவரின் பெயர் சித்திரகுப்தன். விநோதம் என்ன வென்றால், அந்த சித்திரகுப்தனே சாவர்க்கர்தான். ஏனென்றால், அந்தச் சித்ரகுப்தன் அதற்கு முன்னரும் சரி, பின்னரும் சரி எந்தப் புத்தகமுமே எழுதவில்லை.

எழுதிய ஒரே புத்தகம் சாவர்க்கருடைய வரலாறு மட்டும்தான். சுயவரலாறு எல்லோரும் எழுதுவது தான். ஆனால், அதை அவர்களின் பெயரில் எழுதுவது அல்லவா உலக வழக்கம்! தனது படத்தை தானே வணங்கிய நித்யானந்தாவைப் போல, தன்னைப் பற்றித் தானே புகழ்ந்து எழுதியவர் சாவர்க்கர்.

'அவர் ஏன் மன்னிப்புக் கேட்டார் தெரியுமா? தேசப் பணிக்காகவே அதைச் செய்தார்' என்கிறார்கள் சிலர். அப்படி மன்னிப்புக் கேட்டு வெளியே வந்து சாவர்க்கர் செய்த மாற்றங்கள் என்று எதுவுமில்லை. ஆங்கிலேயனை எதிர்க்கும் எந்தச் செயல்களையுமே அவர் முழுவீச்சில் செய்யவும் இல்லை. மழைக்குப் பயந்து எலி வளைக்குள் ஒடுங்கிக் கொள்பவதைப் போல, ஒடுங்கிக் கொண்டார்.

ஆங்கிலேயன் இந்தியாவைவிட்டு விலகும் வரை, அவருக்கு மழைக்காலம் போகவே இல்லை. காந்தி வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை ஆரம்பித்த போது, அதிலிருந்து விவரமாக விலகி நின்றவர் சாவர்க்கர். இப்படி இன்னும் எத்தனையோ சொல்ல லாம்.

'காந்தி 4 ஆண்டுகள்தான் சிறையில் இருந்தார். ஆனால், சாவர்க்கர் 14 ஆண்டுகள் சிறையில் இருந்தார். அப்படியென்றால், யார் பெரிய தேசபக்தர்' என்றும் கேட்கிறார்கள். இதில் இருக்கும் தகவல் சரி, ஆனால், பார்வை தவறு.

காந்தி ஒரே முறையாக 4 ஆண்டுகள் சிறையில் இருக்கவில்லை. மொத்தம் பதினொரு முறை அவர் சிறைக்குச் சென்று திரும்பினார்.

தென்னாப்பிரிக்கச் சிறைகளும் அதில் அடக்கம். ஒன்றை நோக்கவும் ஒவ்வொரு முறையும் ஒரு போராட்டம், அதில் விசாரணை, அதற்குப் பிறகு தண்டனை என்று சிறை சென்றவர் அவர். அவர் சிறை சென்றபோதெல்லாம், மக்கள் கொதித்தொழுந்தார்கள். காந்தியை விடுவிக்கக்கோரி போராடினார்கள். அவரும் தன்பங்குக்கு சிறை சீர்திருத்தம் என்று களமிறங்கினார்.

ஆக, பிரட்டீசு அதிகாரிகளுக்கு கண்முன்னால் இருந்த ஒரே வழி, காந்தியை விடுவிப்பது மட்டும்தான். ஒரு தடவை, நான்கு நாள்களுக்குள் மூன்றுமுறை காந்தி கைது செய்யப்பட்டு திரும்பத் திரும்ப விடுவிக் கப்பட்டிருக்கிறார்.

அந்தளவுக்கு ஆங்கிலேய அரசுக்கு நெருக்கடிகளை உருவாக்குபவராக இருந்திருக்கிறார் காந்தி.

தென்னாப்பிரிக்காவில் காந்தி சிறைத்தண்டனை முடிந்து வெளியே வந்தபோது, காந்தியை வரவேற்க ஆயிரக்கணக்கான மக்கள் வாசலில் திரண்டு நின் றார்கள் என்பது வரலாறு. அவர் பின்னால் எப்போ துமே மக்கள் இருந்தார்கள். ஏனென்றால், அவர், அவர்களின் மனங்களில் இருந்தார்.

75 வயதிலும்கூட சிறைக்குச் செல்லும் துணிவை, அவருக்கு அளித்தது அந்த மக்களின் அன்புதான்.

ஆனால், சாவர்க்கர் விவகாரம் அப்படியல்ல. அவருக்காக யாரும் இங்கே கொதித்தெழவில்லை.

சாவர்க்கரை விடுவிக்கக்கோரி ஒரு போராட்டம் கூட இங்கே நடக்கவில்லை. ஏன், அவரது தரப்பினரே கூட அவரை மறந்து விட்டிருந்தார்கள்.

சாவர்க்கருக்கும் மக்கள் செல்வாக்குக்கும் காத தூரம். சாவர்க்கர் என்றொருவர் இருக்கிறார் என்ப தையே மக்கள் அறிந்திருக்கவில்லை. அறியும் அளவுக்கு சாவர்க்கரும் மக்களுக்காக எதுவும் செய்யவில்லை. அவர் பேசியதெல்லாம் வன்முறை, வெறுப்பு, பிரிவினை மட்டும்தான். சிறைக்குள்ளேயும் அவர் அதைத்தான் செய்தார்.

கைதிகளை இசுலாமியர், இந்துக்கள் என்று பிரித்துப் பார்த்து வேலையைக் காட்டியனார். இது, அவர் எழுதிய அந்தமான் சிறை அனுபவங்கள் புத்தகத்திலேயே பதிவாகியிருக்கிறது. 'இசுலாமியர் களின் தொழுகை நேரத்தில், சங்கநாதம் எழுப்புங்கள் என்று இந்துக்களை அவர் தூண்டினார்' என்று, அவரது ஆதரவாளர்களே பதிவு செய்திருக்கிறார்கள்.

எல்லாவற்றுக்கும் மேலே, 'நான் நெருப்புடன் விளையாடுகிறேன் என்று எனக்குத் தெரியும். ஆனால், அதை நான் தொடர்ந்து செய்வேன்' என்று, ஆங்கிலே யனின் நீதிமன்றத்தில் நெஞ்சம் நிமிர்த்தி அறிவித்தவர் காந்தி!

சின்னாவுக்கு முன்பே, இரண்டு தேசங்கள் கோட்பாட்டை முன்மொழிந்தவர் சாவர்க்கர்தான்.

நன்றாகக் கவனிக்கவும். சின்னாவை வழிமொழிய வில்லை சாவர்க்கர். அவர்தான் முன்மொழியவே செய்கிறார்.

அந்த 'Holy land' கருத்தாக்கத்திலேயே, இரண்டு தேசங்களுக்கான அடித்தளம் போடப்பட்டுவிட்டது. அதையே, பின்னாளில் அரசியல் வெளியில் விரித் தெடுத்தார் சின்னா.

அதாவது, கல்லை உரசி நெருப்பைப் பற்றவைத்தார் சாவர்க்கர். சின்னா அதை ஊதிப் பெரிதாக்கினார் அவ்வளவுதான்.

உண்மையில் 1939ஆம் ஆண்டு லாகூர் மாநாட்டில் தான், இரண்டு தேசங்கள் (Two Nations)'எனும் தீர்மானத்தையே போடுகிறது முசுலீம் லீக். ஆனால், 1937 ஆம் ஆண்டே, 'இரண்டு தேசங்கள்' தீர்மானத்தை முன்மொழிந்து விட்டது இந்து மகாசபா. சாவர்க்கர் அப்போது அதன் தலைவர்.

1937ஆம் ஆண்டின் முற்பகுதியில், அகமதா பாத்தில் நடந்த இந்து மகாசபாக் கூட்டத்தில் பேசிய சாவர்க்கர், 'இங்கே இரண்டு தேசங்கள் இருக்கின்றன. ஒன்று இந்துக்களுடையது, இன்னொன்று முசுலீம் களுடையது' என்று பிரகடனம் செய்தார். அந்தப் பிரகடனமே பின்னர் தீர்மானமானது.

மாதவ சதாசிவ கோல்வால்கர். சாவர்க்கரின் சீடர் இவர். கோல்வால்கர் என்ன சொல்கிறார் தெரியுமா?

'இந்துப் பெரும்பான்மை அடையாள அரசியலே உண்மையான தேசியவாதம். அது அல்லாத எந்த அரசியலும் இந்தியாவுக்கு விரோதமானது' என்று இன்னொரு குண்டைத் தூக்கி வீசுகிறார்.

இவர்களின் இதுபோன்ற கூற்றுகளுக்குப் பிறகு தான், ஜின்னா அதிக நம்பிக்கை கொள்கிறார். அவர்களே சொல்லிவிட்டார்கள். அப்புறம் என்ன? என்று பிரிவினைக்கத்தியை இன்னும் ஆழமாக இந்தியாவின் நெஞ்சில் சின்னா இறக்க ஆரம்பித்தது 1940 களுக்குப் பிறகே!

இன்னொரு தகவல், 1945ஆம் ஆண்டு இன்னும் எல்லையைக் கடக்கிறார் சாவர்க்கர். 'சின்னாவின் இரண்டு தேசங்கள் எனும் கருத்தாக்கத்தில் எனக்கு எந்த முரண்பாடும் தெரியவில்லை. நாம் இந்துக்கள் ஒரு தேசம், முசுலீம்கள் இன்னொரு தேசம்' என்கிறார்.

இங்கே நாம் இன்னொன்றைப் பார்க்க வேண்டும். இன்றுவரை பெரியாருக்கும் அண்ணாவுக்கும் ஏன் பாரத ரத்னா மறுக்கப்படுகிறது?

எம் ஜி ஆரால் அடைய முடிந்த அந்த விருதை அவரின் ஆசான்களான அவர்களால் ஏன் அடைய முடிய வில்லை?

இதற்குக் காரணமாகச் சொல்லப்படுவது ஒரே ஒரு விசயம்தான். அதாவது, அவர்கள் பிரிவினை பேசி னார்கள் என்பது. பெரியாரும் அண்ணாவும் பேசியது பிரிவினை என்றால், சாவர்க்கர் பேசியதற்கு பெயர் என்ன? பெரியார், அண்ணாவுக்கு ஒரு நியாயம், சாவர்க் கருக்கு ஒரு நியாயமா?' அதெப்படி ஒரே விசயத்தில் இரண்டு நியாயங்கள் இருக்க முடியும்' என்பதே நாம் எழுப்பும் கேள்வி!

கடைசியாக, காந்தி கொலை! காந்தி கொலையில் சிக்கியவர்கள், மொத்தம் 9 பேர். நாதுராம் கோட்சே, அவரின் சகோதரர் கோபால் கோட்சே, நாராயண் ஆப்தே, விசுணு கர்கரே, மதன்லால் பக்வா, சங்கர் கிசுதயா, தத்தாத்ரேயா பர்சுரே, விநாயக் தாமோதர் சாவர்க்கர். இன்னொருவர் இருக்கிறார் அவர் திகம்பர் பாட்ஜே,

இந்த பாட்ஜே மிகவும் முக்கியமானவர். ஏனென் றால், இவரது வாக்குமூலம்தான் கோட்சேவுக் கும் சாவர்க்கருக்கும் இருந்த தொடர்பை, தெள்ளத் தெளிவாகக் காட்டியது.

பாட்ஜேவின் வாக்குமூலம் இது... '1948 சனவரியில் நாங்கள் இருமுறை சாவர்க்கரை சந்தித்தோம். முதல் சந்திப்பு சனவரி 14ஆம் தேதி நடந்தது. நான், நாதுராம், ஆப்தே மூவரும் பாம்பேயில் இருக்கும் சாவர்க்கர் சதனுக்குச் சென்றோம். இரண்டாவது மாடியில் அவரது அறை இருந்தது. நான் கட்டடத்துக்கு வெளியே நின்றேன். நாதுராமும் ஆப்தேவும் உள்ளே சென்றனர். சிறிது நேரம் கழித்து இருவரும் வெளியே வந்தனர். 'காந்தியையும் நேருவையும் முடிக்க வேண்டும் என்று அவர் சொன்னதாக கோட்சே என்னிடம் சொன்னார்'.

'Gandhi and Nehru should be finished' என்ற வார்த்தையையே வாக்குமூலத்தில் சொல்கிறார் பாட்ஜே. அந்த ஜனவரி 14ஆம் தேதிதான் கோட்சே வின் கைக்கு துப்பாக்கியும் வந்து சேர்கிறது.

அடுத்த சந்திப்பு, ஜனவரி 17ஆம் தேதி நடக்கிறது. இப்போதும் அதே மூவர்தான் செல்கிறார்கள். இந்த முறை பாட்ஜே, சதனுக்குள் நுழைந்து, முகப்புப் பகுதி யில் நிற்கிறார். 10 நிமிடம் கழித்து கோட்சேவும் அப்தேவும் மாடி அறையில் இருந்து வெளியே வருவதை, பாட்ஜே கவனிக்கிறார். அவர்களுக்கு முன்னால் நின்றபடி ஒரு மனிதர் பேசிக் கொண்டிருக் கிறார். அவரது முகம் பாட்ஜேவுக்கு சரியாகத் தெரியவில்லை. ஆனால், குரல் நன்றாகக் கேட்கிறது. அந்த நபர், மராத்தியில் பேசுகிறார்.

'வெற்றியுடன் திரும்புங்கள்' என்று, அவர் இருவர்களிடம் சொல்லும் வார்த்தை பாட்ஜேவின்

காதில் விழுகிறது. அடுத்து, ஜனவரி 20ஆம் தேதி, காந்தியைக் கொல்ல ஒரு முயற்சி நடக்கிறது. அதைச் செய்தது, மதன்லால் பக்வா, விசுணு கர்கரேவால் சாவர்க்கரிடம் அறிமுகம் செய்து வைக்கப் பட்டவன் அவன்' என்பது, சாவர்க்கரின் உதவியாளர் களான ராமச்சந்திர காசரும் விசுணு தம்லேவும் அளித்த வாக்குமூலம். ஆனால், அந்த முயற்சி தப்புகிறது. பக்வா கைது செய்யப்படுகிறான். சனவரி 30ஆம் தேதி காந்தி கொல்லப்படுகிறார். கோட்சேவின் துப்பாக்கியிலிருந்து புறப்பட்ட மூன்று குண்டுகள் அதைச் செய்கின்றன.

பாட்ஜேவை 'நம்பகமான சாட்சி (Trustful Witness)' என்றே வரையறுக்கிறார், விசாரணை நீதிமன்றத்தின் நீதிபதி ஆத்ம சரண். ஆனால், அவரது சாட்சியத்தை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள், கிடைக்காமல் போகின்றன. இதன் அடிப்படையிலேயே, சாவர்க்கர் விடுவிக்கப்படுகிறார். உண்மையில், கோட்சேவுக்கும் சாவர்க்கருக்கும் இருந்த உறவு குரு சீடன் வகையி லானது. இந்து மகாசபா கூட்டங்களுக்கு, கோட்சே வையும் ஆப்தேவையும் அழைத்துச் செல்வதில், அதிக ஆர்வமாக இருந்திருக்கிறார் சாவர்க்கர்.

ஆனால், காந்தி கொலைக்குப் பிறகு, இருவருக்கும் இடையே விரிசல் உண்டாகிறது. காரணம், சாவர்க்கரின் சந்தர்ப்பவாத வாக்குமூலம். கோபால் கோட்சேவின் வழக்கறிஞர் இனாம்தார் நாதுராமின் அப்போதைய மனவோட்டம் என்னவாக இருந்தது என்பதைப் பதிவு செய்கிறார். 'நாதுராம் சிறையில் தனிமைப்பட்டுக் கிடந்தார். அவருக்கு அப்போது தேவைப்பட்டது அவரது கையை அன்பாகத் தொட்டு உரையாடக்கூடிய அவரது குருவின் சொல். ஆனால், அது நடக்கவில்லை. அந்த வருத்தத்தை சிறையில் என்னைச் சந்தித்தபோது பகிர்ந்து கொண்டார் நாதுராம்' என்கிறார் அவர்.

1964 அக்டோபரில் கோபால் கோட்சே விடுதலை யானார். அடுத்த மாதமே, அவருக்கு ஒரு வரவேற்பு விழா நடக்கிறது. அதில், 'காந்தியைக் கொல்வதன் அனுகூலங்களை எனக்கு விளக்கினான் நாதுராம்' என்று சொல்கிறார் கோபால் கோட்சே. விவகாரம் மீண்டும் வெடிக்கிறது. நீதிபதி ஜே.எல் காபூர் தலைமை யில் கமிட்டி அமைக்கப்பட்டு, காந்தி கொலை மறு விசாரணை செய்யப்படுகிறது.

இது நடந்தது 1965 மார்ச் மாதம். அடுத்த ஆண்டு, பிப்ரவரி மாதம் சாவர்க்கர் இறக்கிறார். உணவையும் தண்ணீரையும் மறுத்து வலுக்கட்டாயமாக அவர் அந்த மரணத்தைத் தேடிக் கொள்கிறார். அவர் அந்த முடிவை எடுக்க முக்கியமான காரணம், காபூர் கமிட்டியார் அவர் முற்றிலுமாக சுற்றி வளைக்கப் பட்டி ருந்தார் என்பது. இன்னும் கொஞ்சநாள் இருந்திருந் தால், காபூர் கண்டிப்பாக சாவர்க்கர் கையில் விலங்கு மாட்டியிருப்பார். காபூர் அறிக்கையின் ஆறாம் அத்தியாயத்தில், `Background of the accused' என்றொரு பகுதி இருக்கிறது. அதில் காந்தி கொலை யில் சாவர்க்கருக்கு இருந்த பங்கு, விரிவாகவே பேசப் படுகிறது.

காந்தி மீதான சாவர்க்கரின் பகைக்கு மிக முக்கியக் காரணம், அவரது அகிம்சை! வாழ்வு முழுதுமே, 'Hindu Masculinity (இந்து வீரம்)' என்பது குறித்து தீவிரமாகப் பேசுகிறார் சாவர்க்கர். ஒன்று தெரியுமா? சாவர்க்கர் பசுவழிபாட்டை கடுமையாக எதிர்த்தவர். அதற்குப் பின்னால் இருந்தது. பன்மைத்துவத்தைப் பேணும் அக்கறை என்று தவறாக நினைக்க வேண்டாம். 'பசுவை வணங்கினால் பசுவைப் போலவே நாமும் சாந்தமாகி விடுவோம்' என்று அவர் எண்ணியதே, அதற்குக் காரணம். அந்த அளவுக்கு அகிம்சை அவருக்கு ஆகாத ஒன்றாக இருந்தது. அவர் ஆரம்ப காலத்தில் அங்கம் வகித்த, அபினவ் பாரத் அமைப்பு, அடிப்படையிலேயே வன்முறையைப் போற்றும் அமைப்பு. அதிலிருந்து கிளைத்து எழுந்து வந்தவர் அவர்.

இந்துக்களை வீரம்மிக்க ஒரு சமுதாயமாகவே அவர் உருவகித்தார். 'பள்ளிகளில் படிப்பைவிட உடற்பயிற்சிக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்' என்று அவர் குரல் கொடுத்தது, அதற்காகவே. கனவு வெளியில், வேதகாலத்திலேயே வாழ்ந்து கெண்டிருந்த மனிதர் அவர். ஆகவே, அகிம்சை அவருக்குப் பிடிக்கவில்லை.

இப்படிப்பட்டவர், வீரம் செறிந்த நேதாசியுடன் இணைந்திருக்கலாமே என்ற கேள்வி சிலருக்கு எழலாம். அந்தக் கேள்வி நியாயமான ஒன்று. ஆனால், அங்கேதான் ஒரு விசயம் இருக்கிறது. அதாவது, காந்தி யைப் போலவே, நேதாசியும் உடையாத, மதச்சார்பு இல்லாத ஒரு இந்தியாவைக் கனவு கண்டவர். நேதாசி யின் அகிம்சையைக் காந்தி சந்தேகித்தாரே ஒழிய, அவரது மதச்சார்பற்ற தன்மையை அவர் எப்போதுமே சந்தேகித்ததில்லை.

நேதாஜியின் படையில் இசுலாமியர்களும் அதிகளவில் பங்கெடுத்ததற்கு, அவரது மதச்சார்பற்ற தன்மையே காரணம். அது, சாவர்க்கரின் பிரித்தாளும் கொள்கைக்கு உவப்பானதாக இல்லை. அதுவும் இல்லாமல் சாவர்க்கர் கள வீரரும் அல்ல. அவர் எப்போதுமே பின்னால் இருந்து இயங்குபவர். தூண்டி விடுவதில் சமர்த்தர். 'Man in the chair' என்போம் அல்லவா, அதைப் போன்றவர்.

இன்னொன்று தெரியுமா? அவர், இந்தியாவில் வைத்து கைது செய்யப்படவில்லை. லண்டனில் வைத்துதான் கைதானார். வில்லியம் கர்சனின் கொலையாக இருக்கட்டும். சாக்சனின் கொலையாக

இருக்கட்டும், அவர் நேரடியாகச் செயலாற்றவே இல்லை. அதற்குரிய அத்தனை உதவிகளையும் செய்தார்.

திட்டங்களை வகுத்தார். '20 துப்பாக்கிகளை அவர் லண்டனிலிருந்து இந்தியாவுக்கு அனுப்பினார்' என்கின்றன தரவுகள். ஆனால் எங்குமே காட்சிக்கு வராமல் சாமர்த்தியமாக ஒதுங்கிக் கொண்டார் சாவர்க்கர். அந்தமான் சிறையிலும்கூட தூண்டிவிடும் வேலையைக் கச்சிதமாகச் செய்திருக்கிறார். சக கைதிகளை உண்ணாவிரதத்துக்குத் தூண்டிவிட்டு விட்டு, அவர் உணவருந்தச் சென்ற நிகழ்வும்கூட நடந்திருக்கிறது.

ஆகவே, இதுதான் சாவர்க்கர். இவைதான் அவரது அரசியல், மக்களைப் பிரித்தாளும் சித்தாந்தம், களத்துக்கு வராமல் பின்னே இருந்து இயங்குவது, மாட்டிக் கொண்டால் சீடனாகவே இருந்தாலும் கழட்டிவிடுவது என்று இருந்தவர் சாவர்க்கர். அவரது சித்தாந்தத்தாலோ, அவரது செயற்பாடுகளாலோ இந்தியாவுக்கும் எந்தப் பயனுமில்லை. இவ்வளவு எடுத்துச் சொன்ன பிறகும், 'சாவர்க்கருக்கு பாரதரத்னா கொடுத்தால் என்ன தப்பு' என்று கேட்பவர்களிடம் சொல்வதற்கு ஒன்றுமில்லை. குறைந்தபட்சம் ஒன்றை மட்டுமேனும் உணர்வோம்.

சாவர்க்கர் முன்னே எழுந்துவரும் ஒவ்வொரு முறையும் அசோகர் புதைக்கப்படுகிறார். அவரது தத்துவம் புதைக்கப்படுகிறது. ஒன்றை யோசிப்போம். அகிலத்தின் எத்தனையோ நாடுகளில் ஜனநாயகம் வெறும் கனவாக மட்டுமே இருக்கும் சூழலில், இந்தியா மட்டும் எப்படி அதை இன்னும் தக்க வைத்திருக்கிறது? காற்றடித்தாலும் மழையடித்தாலும், இந்தியாவின் ஜனநாயக தீபம் மட்டும் தொடர்ந்து ஒளிர்வது எப்படி? காரணம் எளிது. ஏனென்றால், இந்தியாவின் மரபிலேயே ஜனநாயகப் பண்புகள் இறுக்கிக் கட்டப் பட்டிருக்கின்றன. கட்டியவர், அந்த மகா சக்கரவர்த்தி அசோகர். அவரும் ஓர் அரசர்தான். ஆனால், மற்ற அரசர்களிடம் இருந்து அசோகர் எங்கே பேறுபடுகிறார் தெரியுமா? மக்களின் மீதான அபிமானத்தில் வேறுபடுகிறார்.

மரபை சீரமைத்து முன்னெடுத்துச் சென்றதில் வேறுபடுகிறார். கலிங்கத்தின் தயா நதிக்கரையில் இறந்து மிதந்த மனித உடல்களைக் கண்டு, 'என்ன செய்துவிட்டேன் நான்' என்று வருந்திய குரலில் வேறுபடுகிறார்.

ஆம். இத்தேசம் அசோக தத்துவத்தால் கட்டமைக்கப்பட்டது. வரலாற்றை நிறைத்து நிற்கும் எத்தனையோ பேரரசர்களின் பெயர்களின் மத்தியில், அசோகர் மட்டுமே ஒரு வீழா நட்சத்திரமென் தனித்து ஒளிர்கிறார்' என்று ஆய்வாளர் எச். சி வெல்ஸ் விழி விரித்துக் கூறினாரே, அந்த அசோகரின் தத்துவத்தால் கட்டமைக்கப்பட்டது.

இதை உணர்ந்தே சிவாஜியை இடது பக்கமும் அக்பரை வலது பக்கமும் ஒதுக்கிவிட்டு, அசோகரை இந்தியாவுக்கு அடையாளமாக்கினார் நேரு. தர்மச் சக்கரம் சுழலும் அந்தச் சிங்கச் சிலையை இந்தியச் சின்னமாக்கி, 'எழுக அவர் வேதம். எக்குடியும் என் குடியே என்றுரைக்கும் அசோக வேதம்' என்று நேரு அறிவித்தபோது இந்திய அன்னை துள்ளிக் குதித்துக் கூத்தாடினாள். சாவர்க்கர் வழிபாடு, அவளின் அந்த மகிழ்ச்சியைக் கண்டிப்பாக நிர்மூலமாக்கும். 2,000 ஆண்டுகளாக இந்த மண்ணில் ஊறி நின்றிருக்கும் மகத்துவத்தை, அது 20 ஆண்டுகளுக்குள் அழித்தொழிக்கும்.

அறிக... அசோகரே புதைகிறாரென்றால் காந்தியும் இருக்கப் போவதில்லை. நேருவும் அகன்றிருப்பார். அம்பேத்கரும் கூட கைவிடப்பட்டிருப்பார். இது உருவாக்கப் போகும் விளைவை, நம்மால் இப்போது உணர முடியாது. கிட்லரின் செர்மனியாக, நத்தேன் யாகூவின் இசுரேலாக இத்தேசம் மாற்றப்பட்ட பிறகுதான், நமக்கு அந்த உணர்வு எழும்.

ஆனால், அப்போது எல்லாமே கையை மீறிப் போயிருக்கும். நமக்கான கங்கைகளைத் தேடி நாம் அலையத் தொடங்கியிருப்போம். நாசிக்குள் புகுந்து நம்மை நிலைகுலையச் செய்யும் ரத்தத்தின் வீச்சத்தை நம்மால் கடக்கவே முடியாமல் இருக்கும். அது வீடோ, அலுவலகமோ, பேருந்தோ, ரயிலோ ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து வெறுமனே அமர்ந்திருப்போம். உண்ணச் சென்றால், தட்டில் இசுலாமிய குழந்தையின் உடைக்கப்பட்ட வெள்ளெலும்பு உணவென நெளியும். உறங்கச் சென்றால், கிறித்தவக் குழந்தையின் உரிக்கப்பட்ட தோல், படுக்கை விரிப்பென விரியும். இரண்டு ஓடிவந்து வெட்டவெளியில் நின்று, வான்நோக்கி இறைஞ்சுவோம், 'அய்யோ... அப்போதே உணரத் தவறிவிட்டோமே...' என்று. அதைக் கேட்கவும் அப்போது நாதியிருக்காது. கடவுளால் தனித்துவிடப் பட்டிருப்போம். அறத்தால் தள்ளிவைக்கப்பட்டிருப்போம். மனிதர்களை மதத்தாலும், இனத்தாலும் பிரித்து அரசியல் செய்த அரக்கர்களின் பின்னால் நின்ற அத்தனை பேருக்கும் கடைசியில் எஞ்சுவது, தீரா பழிச்சொல்லும், விலகா பெரும் பாவமுமே.

அது நமக்கு உவப்பென்றால், சாவர்க்கருக்கு பாரதரத்னா அளிப்போம். அடுத்து, கோல்வால் கருக்கும், கடைசியாக கோட்சேவுக்கும்!

நன்றி : **விகடன்**

1. நற்றிணை, 2. குறுந்தொகை, 3. ஐங்குகுறுநூறு, 4. அகநானூறு, 5. புறநானூறு, 6. பதிற்றுப்பத்து 7. பரிபாடல், 8. கலித்தொகை என்னும் எட்டுத்தொகை சங்கநூல்கள்...!

1. திருமுருகாற்றுப்படை

2. சிறுபாணாற்றுப்படை

3. பெரும்பாணாற்றுப்படை

4. பொருநராற்றுப்படை

5. முல்லைப்பாட்டு

6. மதுரைக்காஞ்சி

7. நெடுநல்வாடை

8. குறிஞ்சிப்பாட்டு

9. பட்டினப்பாலை

10. மலைபடுகடாம்

என்னும் பத்துப்பாட்டு சங்கநூல்கள்!

உலகினர் வியந்து போற்றும் 1. திருக்குறள், 2. நாலடியார், 3. நான் மணிக்கடிகை 4. இன்னாநாற்பது, 5. இனியவை நாற்பது 6. கார் நாற்பது 7. களவழிநாற்பது 8. ஐந்திணை ஐம்பது 9. திணைமொழிஐம்பது. 10. ஐந்திணை எழுபது 11. திணைமாலை நூற்றைம்பது 12. திரிகடுகம் 13. ஆசாரக் கோவை 14. பழமொழி 15. சிறுபஞ்சமூலம் 16. முதுமொழிக் காஞ்சி 17. ஏலாதி 18. கைந்நிலைஎன்னும் பதினெண் கீழ்க்கணக்கு நீதிநூல்கள்.

1. சிலப்பதிகாரம் 2. மணிமேகலை 3. சீவகசிந்தாமணி போன்ற 5 பெரும் காப்பியங்கள்.

1. அகத்தியம், 2. இறையனார் களவியல் உரை 3. புறப் பொருள் வெண்பாமாலை 4. நன்னூல் 5. பன்னிரு பாட்டியல் போன்ற இலக்கணநூல்கள்.


1. தேவாரம் 2. திருவாசகம் 3. திருப்பாவை 4. திருவெம் பாவை 5. நாச்சியார் திருமொழி 6. ஆழ்வார் பாசுரங்கள் போன்ற உலகின் மிகச் சிறந்த பக்தி இலக்கியங்கள்.

1. முத்தொள்ளாயிரம் 2. முக்கூடற்பள்ளு 3. நந்திக் கலம்பகம் 4. கலிங்கத்துப்பரணி 5. மூவருலா 6. முத்தொள் ளாயிரம் போன்ற எண்ணற்ற சிற்றிலக்கிய வகைகள்.

ஒரு மொழியின் மிகச்சிறந்தபண்பே செம்மொழிக்கான பதினொரு தகுதிகளைக் கொண்டிருப்பதுதான்..

1. தொன்மை 2. தனித்தன்மை (தூய்மைத் தன்மை) 3. பொதுமைப்பண்புகள் 4. நடுவுநிலைமை 5. தாய்மைத் தன்மை 6. கலைபண்பாட்டுத்தன்மை 7. தனித்து இயங்கும் தன்மை 8. இலக்கிய இலக்கண வளம். 9. கலைஇலக்கியத் தன்மை 10. உயர் சிந்தனை 11. மொழிக்கோட்பாடு இந்தப் பதினோரு பண்புகளையும் கொண்ட உலகின் மிகமூத்த மொழி என் தாய்மொழிதமிழ்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இந்தஉலகில் “இந்தி” என்ற ஒரு மொழியே இல்லை. ஆனால் 50 ஆயிரம் ஆண்டு களுக்கு முன்னால் எம் முன்னோர்கள் பேசிய மொழி என் தாய்மொழிதமிழ். உலகிற்கே மொழிஎன்றால் என்ன என்று கற்றுக்கொடுத்தவர்கள் தமிழர்கள்.







# தமிழ் இலக்கிய வரிசை

# வருமானத்தை மறைத்த ரஜினிகாந்த்?

நடிகர் ரஜினிகாந்த் கடந்த 2002ஆம் ஆண்டு முதல் 2005ஆம் ஆண்டு வரையில் தாக்கல் செய்த வருமான வரி கணக்குகளில் வருமானத்தை மறைத்த தாக வருமான வரித்துறை குற்றம் சாட்டியது.

இதற்காக 2002 - 2003ஆம் நிதியாண்டுக்கு 6 இலட்சத்து இருபதாயிரத்து 235 ரூபாயும் 20034ஆம் ஆண்டிற்கு 5, 56, 326 ரூபாயும் 2004 - 5ஆம் ஆண்டிற்கு 54,45,875 ரூபாயும் ஆக மூன்று ஆண்டுகளுக்கும் சேர்த்து 66, 22, 436 ரூபாய் ரஜினிகாந்திற்கு அபராதம் விதித்து வருமான வரித்துறை உத்தரவிட்டது.


இதை எதிர்த்து ரஜினிகாந்த் வருமானவரித் துறையிடம் மேல்முறையீடு செய்தார். ஆனால் அவருடைய மேல்முறையீட்டை வருமான வரித்துறை ஏற்கவில்லை. இதையடுத்து நடிகர் ரஜினிகாந்த, வருமான வரித்துறை மேல் முறையீட்டு தீர்ப்பாயத் திடம் முறையிட்டார்.

இந்த வழக்கை விசாரித்த தீர்ப் பாயம், ரஜினிகாந்த் கோரிக்கையை கடந்த 2013ஆம் ஆண்டு ஏற்றுக் கொண்டது. மேலும் அபராதம் விதித்த வருமான வரித்துறையின் உத்தரவையிம் ரத்து செய்தது. இதனை எதிர்த்து சென்னை உயர்நீதிமன் றத்தில் வருமான வரித்துறை மேல்முறையீடு செய்து வழக்குத் தொடர்ந் தது.

வருமான வரித்துறையில் ஆண்டுக்கு ஒரு கோடிக்கு குறைவான வரி தொடர் பான வழக்குகளில் மேல்முறை யீடு தேவையில்லை என்றும், ஏற்கனவே மேல்முறை யீடு செய்யப்பட்டிருந் தால், அந்த வழக்கைத் திரும்பப் பெற வேண்டும் என்றும் மத்திய நேரடி வரிகள் வாரியம் சுற்றறிக்கை வெளியிட்டுள்ளது.

இந்தச் சுற்ற றிக்கையின் அடிப்படை யில் இந்த வழக்கை திரும்பப் பெறுவதாக வருமான வரித்துறை உயர்நீதிமன்றத்தில் தெரிவித்தது. இதையடுத்து ரஜினிகாந்துக்கு எதிரான அனைத்து நடவடிக் கைகளையும் வருமான வரித்துறை கைவிட்டுள்ளது.

ரஜினிகாந்த் தாக்கல் செய்த வருமான கணக்கு களின் அடிப்படையில், கடந்த 200203 மற்றும் 2004 -05 ஆகிய ஆண்களில் படம் எதுவும் நடிக்கவில்லை என்று கூறப் பட்டது. அவரிடம் நடந்த விசாரணையில் தனது அலுவலகம், வீட்டுச் செலவு களை நட்டக் கணக்கில் காட்டியதும் தெரிய வந்தது. ஆனால், அதற்கான ஆவணங்கள் சமர்ப்பிக்கப் பட வில்லை.



இந்த நிலையில் இந்த செலவுகள் விவரம் குறித்து தொடக்கத்தில் தாக்கல் செய்த வருமான வரிக் கணக்கில் அவர் காட்டவில்லை என்பதாலும், இதற் கான வருமானத்தை அவர் மறைத்திருக் கலாம் என்ப தாலும் ரஜினிகாந்துக்கு முதலில் விதித்த அபராதத் தொகையை வருமான வரித்துறை வசூலிக்க முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது.

இந்த அபராதத் தொகை குறைந்த பட்சம் 66.22 இலட்சம் முதல் அதிக பட்சமாக ரூபாய் 1.98கோடி வரை இருக்கும் என்றும் கூறப்படுகிறது.




ஊராட்சிமன்ற கணக்குகளில் இனி காசோலையை பயன்படுத்தக்கூடாது என்றும் ஆன்லைன் மூலம்தான் பணப்பரிவர்த்தனை செய்ய வேண்டும் என்றும் ஊராட்சி தலைவர்களுக்கு புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் உள்ளாட்சி தேர்தல் பல ஆண்டு களாக நடைபெறாமல் இருந்தது. எனவே மக்கள் பிரதி நிதிகள் அங்கு இல்லாத நிலையில், தனி அலுவலர் களை நியமித்து உள்ளாட்சி மன்றங்களின் நிர்வா கங்கள் நடத்தப்பட்டன. இப்படி நியமிக்கப் பட்ட தனி அலுவலர்களின் பதவி காலம் 6 மாதங்களுக்கு ஒருமுறை நீட்டிக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில் கடந்த டிசம்பர் மாதம் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தல் நடத்தப்பட்டது. எல்லை மறுவரையறை பணிகளுக்காக காஞ்சிபுரம், விழுப்புரம், வேலூர் உள்பட 9 மவட்டங்களில் இந்தத் தேர்தல் நடைபெறவில்லை. தற்போது ஊரக உள் ளாட்சி அமைப்புகளுக்கு பிரதிநிதிகளும், தலைவர் களும் தேர்வு செய்யப்பட்டு விட்டனர்.

இந்த நிலையில் 9 மாவட்டங்கள் தவிர மற்ற மாவட்ட கலெக்டர்களுக்கும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் எழுதிய கடிதத்தில் கூறப்பட்டு இருப்பதாவது,

தமிழகத்தில் கடந்த டிசம்பரில் நடைபெற்ற ஊரக உள்ளாட்சித் தேர்தலின் மூலம் மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்டுள்ள உள்ளாட்சி பிரதிநிதிகள் பொறுப் பேற்றுள்ளனர். புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி மன்றத் தலைவர்கள் வசம் ஊராட்சி மன்றப் பொறுப்புகளை உடனடியாக கீழ்குறிப்பிட்டுள்ள அறிவுரைகளை பின்பற்றி ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

கிராம ஊராட்சியின் தனி அலுவலர், சம்பந்தப் பட்ட ஊராட்சியின் பொறுப்புகளை தேர்ந்தெடுக்கப் பட்ட கிராம ஊராட்சி தலைவரிடம் ஒப்படைக்க வேண்டும். ஊராட்சி மன்றத்தலைவர் பொறுப்பை பெற்றுக்கொண்டதற்கான அறிக்கையை தீர்மானப் பதிவேட்டில் பதிவு செய்து, வட்டார வளர்ச்சி அலுவலருக்கு அளிக்க வேண்டும்.

அவ்வாறு அந்த ஊராட்சி ஒன்றியத்திலுள்ள அனைத்து ஊராட்சிகளிலும் கிராம ஊராட்சி தலைவர்கள் பொறுப்பு ஏற்றுக் கொண்டதற்கான அறிக்கையை சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர் மாவட்ட கலெக்டருக்கு தொகுத்து அறிக்கையாக அனுப்ப வேண்டும்.

கிராம ஊராட்சியில் பராமரிக்கப்படும் 31 விதமான பதிவேடுகள் மற்றும் ரசீது புத்தகங்களை, பொறுப் பேற்றுள்ள கிராம ஊராட்சி தலைவர் வசம் தனி

# ஊராட்சி தலைவர்கள்

## காசோலையை பயன்படுத்தக்கூடாது?

அலுவலர்கள் ஒப்படைக்க வேண்டும். இப்பதிவேடுகள் அனைத்தும் ஊராட்சிமன்ற அலுவலகத்தில் மட்டுமே பராமரிக்கப்பட வேண்டும். ஊராட்சி மன்ற அலுவலகம் தவிர வேறு எங்கும் எடுத்துச் செல்ல அனுமதிக்க கூடாது. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 மற்றும் உரிய விதிமுறைகளின்படி ஊராட்சியின் மன்றக் கூட்டங்கள் நடத்தப்படவேண்டும்.

கிராம ஊராட்சியின் வங்கி கணக்குகளின் அனைத்து வங்கிக்கணக்குப் புத்தகங்கள் மற்றும் ரொக்கப் புத்தகங்கள் ஆகியவற்றை புதிதாக பொறுப் பேற்றுள்ள கிராம ஊராட்சி தலைவர் வசம் ஒப்ப டைக்க வேண்டும். இவ்வங்கி கணக்குப் புத்தகங்கள் மற்றும் ரொக்கப் புத்தகங்கள் அனைத்தும் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் வைத்து மட்டுமே பராமரிக்க வேண்டும்.

கிராம ஊராட்சியின் அனைத்து வங்கி கணக்கு களில் நிதிப்பரிவர்த்தனை செய்யும் விதமாக, புதிதாக பொறுப்பேற்றுள்ள ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் துணைத்தலைவர் ஆகியோரின் மாதிரி கையெழுத் துக்கள் தொடர்புடைய வங்கிகளுக்கு அனுப்பி வைக் கப்பட வேண்டும். கிராம ஊராட்சி நிதி நிர்வாகத்தில் அனைத்து நிதிப்பரிவர்த்தனைகளை மேற்கொள்ள அதிகாரம் உடையவர்களான ஊராட்சி மன்ற தலை வர் மற்றும் துணைத்தலைவர்களுக்கு, தனி அலுவலரின் பதவிக்காலத்தில் உள்ள மீத இருப்புத்தொகையின் விபரத்தை தெரிவித்து கடிதம் அனுப்பப்பபட வேண்டும்.

மேலும், நிதிப்பரிவர்த்தனைகள் பொது நிதி மேலாண்மை அமைப்பின் மூலம் செயல்படுத்தப்படு வதால், ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் துணைத் தலைவருக்கு பொது நிதி மேலாண்மை அமைப்பின் மூலம் எவ்வாறு நிதிப்பரிவர்த்தனை செய்வது என்பதை தனி அலுவலர் விளக்க வேண்டும். பொது நிதி மேலாண்மை அமைப்பின் மூலம் நடைபெறும் நிதி பரிவர்த்தனையில், பிபிஏ பிரிண்ட் பேமெண்ட் அட்வைஸ் என்ற பக்கத்தை பதிவிறக்கம் செய்து ஊராட்சி மன்ற துணைத்தலைவர் மற்றும் ஊராட்சி மன்ற தலைவர் கையொப்பமிட்டு வங்கிக்கு அனுப்ப அறிவுறுத்த வேண்டும்.

ஊராட்சி மன்ற நிதி நிர்வாகம் பொது நிதி மேலாண்மை அமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள் ளதால், காசோலைகள் பயன்பாடு அவசியமற்றதாகி உள்ளது. எனவே எக்காரணத்தைக் கொண்டும் ஊராட்சி கணக்குகளின் கீழ் காசோலைகளை பயன் படுத்த கூடாது. இருந்தாலும், ஊராட்சியில் பராமரிக் கப்படும் ஊராட்சிக் கணக்கு 2 என்பதில் (தமிழ்நாடு மின் பகிர்மான கழகத்திற்கு மின் கட்டணம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு குடிநீர் கட்டணம் செலுத்தும் கணக்கு) மட்டும் காசோலை

**"கிராம ஊராட்சியின் அனைத்து வங்கி கணக்குகளில் நிதிப்பரிவர்த்தனை செய்யும் விதமாக, புதிதாக பொறுப்பேற்றுள்ள ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் துணைத்தலைவர் ஆகியோரின் மாதிரி கையெழுத்துக்கள் தொடர்புடைய வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். கிராம ஊராட்சி நிதி நிர்வாகத்தில் அனைத்து நிதிப்பரிவர்த்தனைகளை மேற்கொள்ள அதிகாரம் உடையவர்களான ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் துணைத்தலைவர்களுக்கு, தனி அலுவலரின் பதவிக்காலத்தில் உள்ள மீத இருப்புத்தொகையின் விபரத்தை தெரிவித்து கடிதம் அனுப்பப்பபட வேண்டும்."**

மூலம் மின் கட்டணம் மற்றும் குடிநீர் பொருட்டு, காசோலைகளை அனுமதிக்கலாம்.

ஊராட்சி கணக்கு 2ன் கீழ் வழங்கப்படும் காசோலைகளின் மீது டி.என்.இ.பி.டி.டபுள்யூ, ஏ.டி. என்ற முத்திரையிட்டு ஊராட்சி தலைவரிடம் ஒப்படைக்க வேண்டும். பொது நிதி மேலாண்மை அமைப்பின் மூலம் மேற்கொள்ளப்படும் நிதி பரிவர்த்தனைகள் ஊராட்சி மன்ற துணைத்தலைவர் மற்றும் ஊராட்சி மன்ற தலைவர் ஆகியோர் கையொப்பமிடப்பட்ட பின்பு தான் பரிவர்த்தனை மேற்கொள்ளப்படும்.

எனவே, ஏற்கனவே பயன்படுத்திய காசோலைகள் தவிர மீதமுள்ள காசோலைகளை எவ்வித காரணத்தை முன்னிட்டும் பயன்படுத்தக்கூடாது. கடைசியாகப் பயன் படுத்தப்பட்ட காசோலையின் எண் குறிப்பிட்டு, அந்த வங்கி கணக்கில் உள்ள மீதித்தொகையை உரிய படி வத்தில் பதிவு செய்து மாவட்ட கலெக்டருக்கு அனுப்பி வைக்க வேண்டும். மீதமுள்ள காசோலைகளை தொடர்புடைய வட்டார வளர்ச்சி அலுவலர், சம்பந் தப்பட்ட உதவி இயக்குநருக்கு (ஊராட்சிகள்) அனுப்பி வைக்க வேண்டும்.

அவ்வாறு பெறப்படும் மீதமுள்ள காசோலைகளை உரிய விவரங்களுடன் சம்பந்தப்பட்ட உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) தனது அலுவலகத்தில் பூட்டி வைக்க வேண்டும். ஊராட்சிமன்றத் தீர்மானப் பதிவேடு முழு வதுமாக பக்க எண்களை உறுதி செய்து தற்போது பொறுப்பேற்றுள்ள ஊராட்சி மன்றத் தலைவரிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது.

## உலக ஜனநாயக தர வரிசையில் இந்தியா 51 வது இடம்



உலகின் 165 சுதந்திர நாடுகள் மற்றும் 2 பிரதேசங்களில் ஜனநாயகத்தின் நிலை 2019 ஆம் ஆண்டு எப்படி இருந்தது என்று ஆராய்ந்து, தர வரிசைப்படுத்தப் பட்டுள்ளது.

இந்த தரவரிசை, உலக நாடுகளில் நிலவும் தேர்தல் நடைமுறையும் பன்முகத்தையும், அரசு செயல்படும் தன்மை, அரசியல் பங்கேற்பு அரசியல் நாகரிகம், மனித உரிமைகள் ஆகிய ஐந்து அம்சங்களின் அடிப்படையில் ஆராய்ந்து தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த தர வரிசைப் பட்டியலில் இந்தியாவின் நிலை தாழ்ந்து உள்ளது. 10 இடங்கள் சரிந்து இந்தியா 51வது இடத்தை பிடித்துள்ளது.

இந்தியா 2018ஆம் ஆண்டு பெற்ற புள்ளிகள் 7.23 அதே நேரத்தில் 2019ஆம் ஆண்டு பெற்ற புள்ளிகள் 6.90.

தி எகனாமிஸ்ட் இன்டெலிஜன்ஸ் யூனிட் பொருளாதார புலனாய்வு அமைப்பு வெளியிட்டுள்ள இந்த தரவரிசை பட்டியலில், இந்தியாவின் நிலைமை இறங்குவதற்கு காரணம், இங்கு மனித உரிமைகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புதான் என்று சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. சீனா 2.26 புள்ளிகள் சரிவடைந்து. 153 இடத்துக்கு போய் இருப்பது குறிப்பிடத்தகுந்தது.

பாகிஸ்தானுக்கு 108 வது இடம் இலங்கைக்கு 69 வது இடம். ஜனநாயகத்தில் முதல் இடம், நார்வேக்கு கிடைத்துள்ளது. அதற்கு அடுத்த இடத்தில் ஐஸ்லாந்து, சுவீடன் வந்துள்ளன.

உலகின் கடைசி இடத்தில் இருக்கிற நாடு எது தெரியுமா? கிம்ஜாங் அன் ஆட்சி செய்கிற வடகொரியா தான் கடைசி இடத்தில் உள்ளது.

### குழந்தைகளையும் தாயையும் முட்டாமல் தாவிச் சென்ற காளை!

பொங்கலையொட்டி சிவகங்கை மாவட்டத்தில் உள்ள சிராவயலில் 17ஆம் நாள் மஞ்சுவிரட்டு நிகழ்ச்சி நடந்தது. இதைக் காண ஆயிரக்கணக்கானவர்கள் அங்கிருந்த திடலில் கூடினர். அந்தத்திடலில் ஆங்காங்கே காளைகள் அவற்றின் உரிமையாளர்கள் கட்டு மாடுகளாக அவிழ்த்து விடத் தொடங்கினர். இளைஞர்கள் ஆர்வத்துடன் விரட்டிச் சென்று காளைகளை அடக்க முயன்றனர்.

அந்நேரத்தில் கைக்குழந்தை, சிறுவனான மற்றொரு மகனுடன் ஒரு தாய் நடந்து கொண்டிருந்தார். அப்போத அங்கு அவிழ்த்து விடப்பட்ட வெள்ளை நிற காளை ஒன்று அசுர வேகத்தில் பார்வையார்களை மிரட்டியவாறு பாய்ந்து வந்தது.

இரண்டு குழந்தைகளுடன் எதிரே நடந்து வந்த பெண்ணை நோக்கி அந்தக் காளை ஓடியது. இதனால் பதறிப்போன அப்பெண் அந்தக் காளையிடம் இருந்த தப்பிப் பதற்காக குழந்தைகளுடன் தரையில் படுக்க முயன்றார். ஆனால், அதற்குள் அந்தக் காளை சட்டென தனது வேகத்தைக் குறைத்துக் கொண்டு குழந்தைகளுடன் படுத்த அந்தப் பெண்ணை ஒன்றும் செய்யாமல் அவர்களைத் தாண்டி பாய்ந்து சென்றது. இதனால் அந்த மூன்று பேரும் எவ்வித காயமும் இன்றி உயிர்தப்பினர். இதைப்பார்த்த ஒருவர் தனது அலைபேசியில் படம்பிடித்து வெளியிட அவை வலைதளங்களில் பரவியது.

## வழக்கறிஞர் பராசரன் முகவரியில் ராமர் கோவில் அறக்கட்டளை

உச்சநீதிமன்றம் அயோத்தி வழக்கில் ராமர் கோவில் கட்டுவதற்கு ஒரு அறக்கட்டளையை அமைக்க வேண்டும் என்றும் உத்தரவில் கூறியிருந்தது. அதன்படி ராமர் கோவில் கட்டுவதற்காக 'ஸ்ரீராம் ஜென்மபூமி தீர்த்த தலம்' என்ற அறக்கட்டளை உருவாக்கப்பட்டுள்ளதாக நடுவண் உள்துறை அமைச்சகம் அறிவிப்பு வெளியிட்டது.

அந்த அறக்கட்டளையின் அலுவலகம் என்று அறிவிப்பில் கூறப்பட்டு இருப்பது உச்சநீதிமன்ற மூத்த வழக்கறிஞரும் அயோத்தி வழக்கில் இந்து அமைப்புகள் சார்பில் வாதாடியவருமான கே.பராசரன் வீட்டு முகவரி ஆகும். இரண்டு முறை அட்டார்னி ஜெனரலாக பதவி வகித்த 92 வயதாகும் வழக்கறிஞர் பராசரன், தமிழ்நாட்டின் திருவரங்கத்தில் 1927ஆம் ஆண்டு பிறந்தவர்.

அவரது தந்தை கேசவ ஐயங்காரும் சென்னை உயர்நீதிமன்றத்திலும் உச்சநீதிமன்றத்திலும் வழக்கறிஞராகப் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# உழவன் செயலியில் கூடுதல் சேவை அறிமுகம்

தமிழக வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மைத்துறை முதன்மைச் செயலாளர் சுகன்தீப் சிங் பேடி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:

தகவல் தொழில்நுட்பத்தின் மூலம் விவசாயிகளுக்கு தேவையான முக்கிய தகவல்களைத் தருவதற்காக கடந்த ஆண்டு “உழவன்“ செல்போன் செயலி, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் அறிமுகம் செய்யப்பட்டது. இதுவரை 5 லட்சம் பயனாளிகள் இச்செயலியை பயன்படுத்தி வருகின்றனர்.

உழவன் செயலி மூலம் விவசாயிகளுக்கு தேவையான அனைத்து தகவல்களையும் வழங்க வேண்டும் என்ற நோக்கத்தில், தற்போது கூடுதலாக எனது பண்ணை வழிகாட்டி, இயற்கைப் பண்ணையம் மற்றும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் போன்ற மூன்று சேவைகள், உழவன் செயலியில் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்த சேவையின் மூலம், விவசாயிகள் சாகுபடி செய்ய திட்டமிட்டுள்ள பயிர், பரப்பு, நடவு நாள் மற்றும் சாகுபடி முறையை தேர்வு செய்து, விதைப்பு முதல் அறுவடை வரை தினசரி விவசாயிகள் அந்த பயிருக்கு மேற்கொள்ள வேண்டிய அனைத்து சாகுபடி முறைகளையும் எளிதில் அறிந்து கொள்ள முடியும்.

சாகுபடிக்கு தேவைப்படும் விதை, ரசாயன உரங்கள், களைக்கொல்லி போன்ற இடுபொருட்கள் இருப்பு பற்றிய விவரத்தையும் பயிர்க்கடன், அந்த பயிரை காப்பீடு செய்வதற்கு, விவசாயிகள் செலுத்த வேண்டிய பிரிமியத்தொகை, காப்பீட்டுக்கான காலக்கெடு ஆகியவற்றையும் அறிந்து கொள்ளலாம். அறுவடை செய்த விளைபொருட்களுக்கான சந்தை நிலவரத்தை அறிந்து, அதற்கேற்ப விற்பனை செய்து கொள்ளலாம்.

இயற்கைப் பண்ணைய முறையை மற்ற விவசாயிகளும், விற்பனையாளர்களும் தெரிந்து கொள்வதற்காக, உழவன் செயலியில் பயிர் வாரியாக இயற்கைப் பண்ணைய விவசாயிகள் பெயர், விற்பனை யாளர்கள் பெயர் மற்றும் தொலை பேசி எண் போன்ற விவரங்கள் பாலமாக விளங்கும்.

நபார்டு போன்ற நிறுவனங்களால் ஊக்குவிக்கப்பட்ட உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் உள்பட தமிழ்நாட்டில் தற்போது 500 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

விளைபொருட்களை உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் ஒருங்கிணைத்து, சுத்தப்படுத்தி, தரம் பிரித்து, மதிப்புக் கூட்டி, சிப்பம் கட்டி, தர அடையாளத்துடன் சந்தையில் விற்று வருகின்றனர். உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களை நல்லமுறையில் சந்தைப்படுத்துவதற்கு உதவும் வகையில், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் பற்றிய விவரங்கள் உழவன் செயலியில் புதிதாக பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்று கூறப்பட்டுள்ளது.



# ஒரு லட்சத்து முப்பத்துநான்காயிரம் பேர் தற்கொலை!



இந்தியாவில் 2018ஆம் ஆண்டில் 1.34லட்சம் பேர் தற்கொலை செய்துள்ளனர். விவசாயிகளைவிட, வேலை இல்லாதவர்களின் தற்கொலை அதிகரித்துள்ளதாக தேசிய குற்ற ஆவண புள்ளிவிவரத்தில் தெரிய வந்துள்ளது.

இந்தியாவில் விவசாயிகளின் தற்கொலை நிகழ்வுகள் அதிகரித்துவிட்டதாக பரவலான ஒரு பேச்சு உள்ளது. ஆனால், தேசிய குற்ற ஆவணக் காப்பகம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரத்தில் அதற்கு நேர்மாறான தகவல் வெளியாகி உள்ளது. 2018ஆம் ஆண்டில் நடைபெற்ற குற்றங்கள் தொடர்பான அந்தத் தகவலில் கூறப்பட்டுள்ளதாவது:

ஒட்டுமொத்தமாக 2018ஆம் ஆண்டில் 1,34,516 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இது 2017ஆம் ஆண்டைவிட 3.6 விழுக்காடு அதிகம். இதில் மராட்டிய மாநிலம் முதலிடத்திலும் (17,972 பேர்) தமிழ்நாடு இரண்டாம் இடத்திலும் (13,896 பேர்) மேற்கு வங்காளம் மூன்றாவது இடத்திலும், மத்தியபிரதேசம் நான்காவது இடத்திலும் கர்நாடகம் ஐந்தாவது இடத்திலும் உள்ளன. இந்த ஐந்து மாநிலங்களிலேயே நாட்டின் பாதி தற்கொலைகள் நிகழ்ந்துள்ளன.

2018ஆம் ஆண்டில், சராசரியாக தினமும் வேலை இல்லாதவர்கள் 35 பேரும் சுயதொழில் செய்வோர் 36 பேரும் தங்கள் வாழ்க்கையை முடித்துக் கொண்டுள்ளனர். அந்த ஆண்டில் வேலை இல்லாதவர்கள் 12,936 பேரும் (9.6 விழுக்காடு) சுயதொழில் செய்வோர் 13,149 பேரும் (9.8 விழுக்காடு) தற்கொலை செய்துள்ளனர் என்று புள்ளி விபரங்கள் வந்துள்ளன.

## 1965ஆம் ஆண்டு ஆதிக்க இந்தி மொழியை எதிர்த்து தமிழ்மொழி காக்கும் போரில் உயிர்நீத்த ஈகியர்கள்

1. நடராசன், 15.1.1939 சென்னை சிறையில் உயிர் நீத்தார்.

2. தாளமுத்து, 12.3.1939, சென்னை சிறையில் உயிர் நித்தார்.

3. கீழப்பழுவூர் சின்னச்சாமி, பிறப்பு – 30.7.1937 25.1.1964 காலை 4.30 மணிக்கு திருச்சியில் தீக்குளித்தார்.

4. கோடம்பாக்கம் சிவலிங்கம் 26.1.1965, சென்னையில் தீக்குளித்தார்.

5. விருகம்பாக்கம் ஏ.அரங்கநாதன் பிறப்பு 27.12.1931. 27.1.1965 கோடம்பாக்கம் தொடர்வண்டி திடலில் தீக்குளித்தார்.

6. சிவகங்கை இராசேந்திரன் மாணவர், பிறப்பு 16.7.1945. 27.1.1965 சிதம்பரம் அண்ணாமலை நகரில் காவலரால் சுடப்பட்டு இறந்தார்.

7. கீரனூர் முத்து, பிறப்பு – 15.1.1943, 27.1.1965 கீரனூரில் நஞ்சுண்டு மாண்டார்.

8. சத்தியமங்கலம் முத்து, பிறந்த ஆண்டு – 1943, 11.2.1965 சத்தியமங்கலத்தில் தீக்குளித்தார்.

9. ஆசிரியர் வீரப்பன், பிறப்பு – 1.4.1938, 11.2.1965 அய்யம்பாளையத்தில் தீக்குளித்தார்.

10. விராலிமலை சண்முகம், பிறப்பு – 11.8.1943, 25.2.1965

விராலிமலையில் நஞ்சுண்டு இறந்தார்.

11. கோவை பீளமேடு தண்டபாணி, பி.ஈ., படித்தவர், பிறந்த ஆண்டு – 1944. 2.3.1965 பீளமேட்டில் நஞ்சுண்டு இறந்தார்.

12. மயிலாடுதுறை சாரங்கபாணி, பி.காம்.மாணவர், பிறந்த ஆண்டு 1945 இறப்பு 15.3.1965 மயிலாடுதுறையில் தீக்குளித்தார்.

ஒவ்வொரு ஆண்டும், சனவரி – 25 மொழிப்போர் ஈகியர் நாளாக கடைபிடிக்கப்படுகிறது.

– சைதை மணிமாறன்



# அனைவருக்கும் வீடு திட்டம் முழுமையாக நிறைவேறும் வரை யாரும் ஒன்றுக்கும் மேற்பட்ட வீடு வாங்க ஏன் தடை விதிக்கக்கூடாது?



மனித குலத்துக்கு குடியிருக்க வீடு கண்டிப்பாக வேண்டும். இந்தியாவில் வீட்டு வசதிதான் மிகப்பெரிய பிரச்சனையாக உள்ளது. நாட்டில் பல மில்லியன் மக்கள் வீடுகள் இல்லாமல் உள்ளனர். மில்லியன் கணக்கான குழந்தைகள் தெருவோரம் வசிக்கின்றனர். 2018 19ஆம் ஆண்டுகளில் வருமான வரி செலுத்தியவர்கள் தாக்கல் செய்த விவரங்களின் அடிப்படையில் பத்திரிகைகள் ஆய்வு கட்டுரைகள் வெளியிட்டுள்ளது. அதில், நாட்டில் ஒரு கோடியே14 லட்சம் பேர் ஒரு வீடு வைத்துள்ளனர் என்றும் ஆறு ஆயிரத்து 537 பேர் ஒன்றுக்கும் மேற்பட்ட சொந்த வீடுகளை வைத்துள்ளனர் என்றும் கூறப்பட்டுள்ளது. இதன் மூலம் நம் மக்கள் வரி செலுத்துவதை தவிர்ப்பதற்காக தங்களுக்கு சொந்த வீடுகள் எத்தனை உள்ளது? என்ற உண்மை விவரங்களை வருமான வரித்துறைக்கு தெரிவிக்காமல் மறைக்கின்றனர் என்பது நன்றாகத் தெரிகிறது.

கோவை மாவட்டத்தில் 369 ஏக்கரில் துடியலூர்வெள்ளக்கிணறு வீட்டு வசதித் திட்டத்தைக் கடந்த 1996ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் உருவாக்கியது. இதற்காக தனியாருக்குச் சொந்தமான நிலத்தை கையகப்படுத்தியது. இதை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில், நிலத்தின் உரிமையாளர்கள் பலர் வழக்குத் தொடர்ந்தனர். இந்த வழக்கை விசாரித்த தனி நீதிபதி, ‘நிலத்தை கையகப்படுத்துவது குறித்து அதிகம் விற்பனையாகும் பத்திரிகைகளில் அரசு விளம்பரம் செய்யவில்லை. அதனால், நிலத்தை கையகப்படுத்தியது செல்லாது’ என்று கடந்த 2008 ஆம் ஆண்டு உத்தரவிட்டார்.

இதை எதிர்த்து தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மேல்முறையீடு செய்தது. இந்த மேல் முறையீட்டு வழக்கை நீதிபதிகள் என்கிருபாகரன், அப்துல் குத்தூஸ் ஆகியோர் விசாரித்து, மேல்முறையீட்ட வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர். தனி நீதிபதியின் உத்தரவையும் உறுதி செய்தனர். இதுகுறித்து நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவில், வீட்டு வசதி குறித்து நடுவண், மாநில அரசுகளுக்கு சரமாரியாக கேள்வி எழுப்பினர். அந்த உத்தரவில் நீதிபதிகள் கூறியிருப்பதாவது:

வசிப்பிடம் என்பது மக்களுக்கு அடிப்படை தேவையாகும். ஆனால், இங்கு பலருக்கு அந்த வசதி கிடைக்கவில்லை. ஏற்கனவே நம் நாட்டில் மக்கள் தொகை 130 கோடியை தாண்டிவிட்டது. லட்சக்கணக்கான மக்கள் சாலையோர நடைபாதைகளிலும், ராட்சத பைப்புகளுக்கு கீழும் வசிக்கின்றனர். நடுவண் அரசும் அனைவருக்கும் வீடு என்ற திட்டத்தை முன்னெடுத்துள்ளது. இந்தத் திட்டத்தை விரைவாக அமல்படுத்த வேண்டும். எனவே, ஒன்றுக்கும் மேற்பட்ட வீடுகளைச் சொந்தமாக வைத்திருப்பவர்களுக்கு சில கட்டுப்பாடுகள் விதிக்கும்போது, பிறருக்கு அது நன்மையை ஏற்படுத்தும்.

ஒவ்வொரு குடிமக்களுக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட வீடுகளை வாங்க முழு உரிமை உள்ளது. அதேநேரம் வீடுகள் இல்லாதவர்களின் நிலையையும் கருத்தில் கொள்ள வேண்டும். எனவே, அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தை முழுமையாக நிறைவேற்றும் வரை, ஒன்றுக்கு மேற்பட்ட வீடுகளை மக்கள் வாங்குவதைத் தடுக்க சில நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும். அதற்கான அதிகாரம் அரசுக்கு உள்ளது.

நிறைய பணம் வைத்திருப்பவர்கள், வீடுகளை வாங்குவதற்கு பதில், அதை வங்கியில் டெபாசிட் செய்யட்டும். ஒரு குடும்பத்தக்கு ஒரு படுக்கை அறையுடன் கூடிய வீடு போதுமானது. குழந்தைகள் எதிர்காலத்துக்காக கூடுதலாக ஒரு வீடு வாங்க அனுமதிக்கலாம். அதற்காக கூடுதல் கட்டணத்தையும் வசூலிக்கலாம். ஆனால், 3வது வீடு அல்லது அதற்கு மேல் வீடுகளை சொந்தமாக வாங்க தடை விதிக்க வேண்டும். இதன்மூலம் வீடுகளின் விலை குறைவது மட்டுமல்லாமல், எளியவர்களும் வீடுகளை வாங்கக் கூடிய நிலை ஏற்படும். அதுமட்டுமல்ல, ரியல் எஸ் டேட் புரோக்கர்கள், விவசாய நிலங்களை வீட்டு மனையாக மாற்றுவதைத் தடுக்க முடியும். விவசாய நிலங்களும் பாதுகாக்கப்படும். எனவே, இரண்டுக்கும் மேற்பட்ட வீடுகளை சொந்தமாக வைத்திருப்பவர்கள், எந்த வருமானத்தின் அடிப்படையில் அந்த சொந்ததை வாங்கினார்கள்? என்பதை சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் புலன்விசாரணை செய்ய வேண்டம். இதுபோன்ற கட்டுப்பாடுகளினால் நிலம், நீர், மரம் உள்ளிட்ட இயற்கை வளங்களும் பாதுகாக்கப்படும்.

இந்த வழக்கில் நடுவண் வீட்டு வசதி அமைச்சகம், நிதி அமைச்சகத்தின் செயலாளர்களை எதிர்மனுதாரர் களாக தாமாக முன் வந்து சேர்க்கிறோம். அவர்கள் கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதில் அளிக்க வேண்டும். தமிழ்நாடு உள்பட நாடு முழுவதும் சொந்த வீடுகள் வைத்திருப்பவர்கள் எத்தனை பேர்? ஜனத்தொகை, வீடுகளின் எண்ணிக்கையின் விகிதாச்சாரம் என்ன? அனைவருக்கும் வீடு என்கிற நடுவண் அரசின் திட்டம் எப்போது முழுமையாக நிறைவடையும்? இந்தியாவில் எத்தனை குடும்பங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட வீடுகளை வைத்துள்ளனர். இந்த விவரங்கள் அரசிடம் உள்ளதா? ஒருவேளை இந்த விவரங்கள் இல்லை என்றால், ஒரு குடும்பம், தனிபர் எத்தனை வீடுகள் வைத்துள்ளனர்? என்ற கணக்கெடுப்பை நடுவண், மாநில அரசுகள் ஏன் மேற்கொள்ளக்கூடாது?

நடுவண் அரசின், அனைவருக்கு வீடு திட்டம் முழுமையாக நிறைவடையும் வரை, ஒன்றுக்கு மேற் பட்ட வீடுகளை தனிநபர்கள், குடும்பத்தினர் வாங்குவ தற்கு நடுவண், மாநில அரசுகள் ஏன் தடை விதிக்கக் கூடாது? 100 விழுக்காடு கட்டணம் அல்லது கூடுதல் முத்திரைத்தாள் கட்டணத்தை விதித்து, இரண்டாவது வீடுகளை தனிநபர் வாங்குவதை ஏன் தடுக்கக்கூடாது? ஒன்றுக்கு மேற்பட்ட வீடுகளை வாங்குபவர்களுக்கு சொத்துவரி, மின்சார கட்டணம், குடிநீர், கழிவுநீர் வெளியேற்றல் கட்டணம் ஆகியவற்றை நூறு விழுக்காடு ஏன் கூடுதலாக வசூலிக்கக்கூடாது? முதல் கட்டமாக நகர்ப்பகுதிகளில் ஒன்றுக்கும் மேற்பட்ட வீடுகளை தனிநபர், குடும்பத்தினர் வாங்கக் கூடாது என்ற தடை உத்தரவை ஏன் அமல்படுத்தக்கூடாது? ஒன்றுக்கு மேற்பட்ட வீடுகளை வாங்க கடன் கொடுக்கக்கூடாது என்று நிதி நிறுவனங்களுக்கு ஏன் தடை விதிக்கக்கூடாது?

சொத்துகளின் விலையைக் குறைக்கும் விதமாக, வெளிநாட்டில் நிரந்தரமாக குடியுரிமை பெற்று வசிக்கும் வெளிநாட்டு வாழ் இந்தியர்கள், இந்தியாவில் சொத்துகள் வாங்க ஏன் தடை விதிக்கக்கூடாது? இந்த கேள்விகளுக்கு எல்லாம் வருகிற மார்ச் 6ஆம் தேதிக்குள் பதில் அளிக்க வேண்டும் என்று நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

## காவல்துறையினர், பொதுமக்களை அடித்தால் எந்த சட்டத்தில் வழக்கு தொடரலாம்?

**கா**வல் துறையினர் மட்டுமல்ல வேற எந்த ஒரு அரசு துறையைச் சார்ந்த அதிகாரிகளுக்கும் பொது மக்களை அடிக்கும் உரிமைகள் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ் இல்லை. குற்றம் செய்தவரை தண்டிக்கும் உரிமை நீதி மன்றத்திற்கு மட்டுமே உள்ளது. அவ்வாறு அடித்தால் கீழ்காணும் இந்திய தண்டனை சட்டத்தின் பிரிவின் கீழ் அவர்கள் மீது கிரிமினல் வழக்கு தொடர முடியும்.

ஒருவருக்கு கேடு விளைவிக்கும் நோக்கத்தில் சட்டத்தின் செயல்பாடுகளையும் மீறுபவர்கள்

ஒப்புதலைப்பெறுவதற்கு தன்னிச்சையாக காயம் விளைவித்தல்

IPC – 357 சட்டவிரோதமாக அடைத்து வைக்க மயலும் போது தாக்குதல்

IPC – 321 வேண்டுமென்றே தன்னிச்சையாக காயம் விளைவித்தல்

IPC – 322 வேண்டுமென்ற தன்னிச்சையாக கொடுங்காயம் விளைவித்தல்

IPC – 324 ஆயுதங்கள் மூலம் காயம் விளைவித்தல்

IPC – 307 கொலை முயற்சி

அதிகாரிகள் பொதுமக்களை அடித்தால் அது மனித உரிமை மீறல் செயலாக கருதி பதவி பறிபோகும் நிலையும் ஏற்படும்.



# இனி குப்பைகள் அகற்ற கட்டணம்!




சென்னை மாநகராட்சி சார்பில் தினமும் ஒவ்வொரு வீடுதோறும் குப்பைகள் சேகரிக்கப்பட்டு வருகிறது. இந்தநிலையில், இனி அந்த சேவைக்கு கட்டணம் வசூலிக்கப்பட உள்ளது. அதன்படி வீடு ஒன்றுக்கு ரூ.10முதல் ரூ.100 வரை கட்டணமாக செலுத்த வேண்டும்.

அதேபோன்று மக்கும் குப்பைகளையும் மக்காத குப்பைகளையும் தனித்தனியே பிரித்து வழங்கா விட்டால் கூடுதலாக அபராதமும் செலுத்த வேண்டும்.

வீடுகள் மட்டுமின்றி வணிகவளாகங்கள் பொது இடங்கள், கடைகள், மருத்துவமனைகளுக்கும் கட்டணம் வசூலிக்கப்பட உள்ளது. இதற்கு மாநில அரசு ஒப்புதல் அளித்து அரசாணை வெளியிட் டுள்ளது.

இந்த கட்டண நடைமுறையை 3 மாதங்களுக்குள் செயல்படுத்த சென்னை மாநகராட்சி திட்டமிட் டுள்ளது. சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதி களைப் பொறுத்தவரை நாள்தோறும் சுமார் 5,220டன் குப்பைகள் வீடுகள், வணிக வளாகங்கள், மருத்துவ மனைகள் உள்ளிட்ட இடங்களில் இருந்து சேகரிக்கப் படுகின்றன.

அவை தரம் பிரிக்கப்பட்டுமக்கும் குப்பையின் மூலம் உரங்களும் மீத்தேன் எரிசக்தியும் தயாரிக்கப் படுகின்றன. மக்காத குப்பைகள் மறுசுழற்சிக்கு அனுப்பப்படுகின்றன. மாநகராட்சி துப்புரவு ஊழியர் களிடம் குப்பைகளை வழங்கும் மக்களில் பெரும்பா லானோர் அவற்றை தரம் பிரித்து வழங்குவதில்லை. இதனால், பல நேரங்களில் பிளாஸ்டிக் குப்பைகளை அகற்ற முடியாத நிலை ஏற்படுகிறது. இதுதொடர்பாக பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டு வருகிறது.

திடக்கழிவு மேலாண்மை திட்ட விதிகளைக் கடுமையாக்க மாநகராட்சி முடிவு செய்தது. அதன்படி, மக்களிடம் இருந்து பெறப்படும் குப்பைகளை தரம் பிரிக்கப்பட்ட பிறகே வாங்கவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. அவ்வாறு மக்கும் குப்பைளையும் பிரித்து தராதவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட உள்ளது. அதேபோன்ற பொது இடங்களில் குப்பை கொட்டுவோரிடம் இருந்தும் அபராதம் வசூலிக்கப் படும்.

மேலும் அனைத்து இடங்களில் இருந்தும் குப்பைகளை சேகரிக்க தனித்தனியே கட்டணம் வசூலிக்கப்படும். இந்த விதிகளுக்கு எல்லாம் கடந்த ஆண்டு டிசம்பரில் ஒப்புதல் அளிக்கப்பட்டு, அது மாநில அரசின் அனுமதிக்காக அனுப்பப்பட்டது. இதற்கு அனுமதி அளித்து மாநில அரசு, அரசாணை யையும் வெளியிட்டுள்ளது.

மாநகராட்சி மன்ற தீர்மானத்திற்கு, தமிழக அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதுபற்றி பொதுமக்களுக்கு விளம்பரப்படுத்தப்படும்.

3 மாதங்களுக்குள் புதிய கட்டண நடைமுறை செயல்படுத்தப்படும். சொத்து வரியுடன் சேர்த்து வீடுகளுக்கான குப்பை சேகரிப்புக் கட்டணம் வசூலிக்கப்படும். விதிகளை மீறுபவர்களுக்கான அபராதத் தொகை உடனடியாக வசூலிக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

வீடுகள் ரூ.10 முதல் ரூ.100 வரை, வணிக நிறுவனங்கள் ரூ.1000 முதல் ரூ.5000 வரை நட்சத்திர விடுதிகள் ரூ.300 முதல் ரூ.3000 வரை, திரையரங்குகள் ரூ.750 முதல் ரூ.2000 வரை, அரசு அலுவலகங்கள் ரூ.300 முதல் ரூ. 3000 வரை, உரிமம் பெற்ற கடைகள், ரூ.500 முதல் ரூ.1000 வரை, பொது இடஙகளில் நடத்தப்படும் நிகழ்ச்சிகளுக்கு ரூ.5000 முதல் ரூ.20,000 வரை, மருத்துவமனைகள் மற்றும் கிளினிக்குகள் ரூ.2000 முதல் ரூ.4000 வரை, தனியார் பள்ளிகள் ரூ.500 முதல் ரூ.300 வரை.

பொது இடத்தில் குப்பை கொட்டினால் ரூ.500 முதல் ரூ.5000 வ்ரை தரம் பிரித்து வழங்காதவர்களுக்கு ரூ.500 முதல் ரூ.5000 வரை, பொது இடத்தில் கட்டுமான கழிவுகள் கொட்டினால் ரூ.2000 முதல் ரூ.5000 வரை, குப்பைகளை எரிப்பவர்களுக்கு ரூ.500 முதல் ரூ.2000 வரை அபராதத்தொகை வசூலிக்கப்படும். •

# கேரளாவிலுள்ள தேவாலயத்தில் நெகிழ்ச்சி சம்பவம்



# தன்னை தாக்கியவரின் கால்களை கழுவி முத்தமிட்ட பாதிரியார்

கேரள மாநிலம் திருச்சூர் மாவட்டம் மாளா பகுதியில் கிறித்தவ தேவாலயம் உள்ளது. இந்த தேவாலயத்தில் பாதிரியாராக இருப்பவர் நவீன். கடந்த சில நாட்களுக்கு முன்பு இந்த கிறித்தவ சபையைச் சேர்ந்த ஒருவர், பாதிரியார் நவீன் மீது உள்ள கோபத்தில் அவரைத் தாக்கினார். இது குறித்து ஆலய நிர்வாக கமிட்டியினர் போலீசில் புகார் செய்தனர்.

போலீஸ் விசாரணை நடந்து வரும் நிலையில் பாதிரியாரைத் தாக்கியவர், ஆலய நிர்வாக கமிட்டியிடம் வந்து போலீஸ் வழக்கை வாபஸ் பெறுமாறு கேட்டுக்கொண்டார். அப்போது நிர்வாக கமிட்டியினர், தேவாலயம் வந்து பொது பிரார்த்தனை நடைபெறும்போது பாதிரியார் நவீனிடம் மன்னிப்பு கேட்டால் வழக்கை வாபஸ் பெறுவதாக கூறினார்.

இதைத்தொடர்ந்து நேற்று முன்தினம் பாதிரியாரைத் தாக்கியவர் மன்னிப்பு கேட்க தேவாலயம் வந்தார். அங்கு பொதுப் பிரார்த்தனை நடந்து கொண்டிருந்தது. அப்போது பாதிரியார் நவீன், தன்னை தாக்கியவரை பார்த்து அருகே வருமாறு அழைத்தார். மேலும், நிர்வாக கமிட்டியினர் கூறியதன்பேரில் தேவாலயம் வந்தது மகிழ்ச்சி அளிக்கிறது என்றார். பின்னர் பாதிரியார் ஒரு பாத்திரத்தில் தண்ணீரை எடுத்து வந்து, தன்னை தாக்கியவரின் கால்களை கழுவி முத்தமிட்டார். மேலும், சகோதரனே எனக்கு உங்கள் மீது கோபமும் இல்லை என்று கூறினார். அப்போது பாதிரியாரை தாக்கியவரின் கண்களில் இருந்து தாரைதாரையாக கண்ணீர் வந்தது. இந்தச் சம்பவம் தேவாலயத்திற்கு வந்திருந்தவர்களுக்கு நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

பின்னர், பாதிரியார் ஆலயத்திற்கு வந்திருந்தவர்களை பார்த்து பேசுகையில், மன்னிப்பு கேட்க இவர் தேவாலயம் வந்துள்ளார். அவர் மன்னிப்பு கேட்க தேவையில்லை என்பது எனது கருத்து. என் கருத்து சரி என்று நீங்கள் சம்மதம் தெரிவித்தால் எல்லோரும் எழுந்து கைகளால் கரவொலி எழுப்புங்கள். இல்லையெனில் அவரை மன்னிப்புக் கேட்கச் செய்யலாம் என்றார். அப்போது ஆலயத்தில் பிரார்த்தனைக்கு வந்தவர்கள் அனைவரும் ஒருசேர எழுந்து நின்று கரவொலி எழுப்பினர். இதைக்கண்டு பாதிரியார் மகிழ்ச்சி அடைந்து தன்னை தாக்கியவரிடம் மன்னிப்பு கேட்க வேண்டாம். திரும்பிச் செல்லுங்கள் என்று கூறி அனுப்பி வைத்தார்.

மன்னிப்பு கேட்க வந்த அந்த நபர் தான் செய்த தவறை உணர்ந்து இனி புதுமனிதனாக வாழ சபதம் எடுத்து அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார்.

# என்னவாயிற்று தமிழர்களுக்கு?

இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் பணப்புழக்கம் மிகப்பெரிய அளவில் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளது இதற்கு காரணம் ஏன் எது?

பல நண்பர்கள் மோடி தான் காரணம் என்று சொல்கிறார்கள். எல்லா தொழில்களிலும் தமிழர்களுக்கு திமிரு அதிகம் ஆகிவிட்டது அதனால் உடல் உழைப்பை விரும்புவதில்லை. அதோடு சாராயம் மது மற்றும் சோம்பேறித்தனம் லேசான வேலையை செய்ய, உழைக்காமல் தினமும் இரு நூறு ரூபாய் கிடைத்தால் போதும் என்ற மனநிலை. அரசியல் கட்ட பஞ்சாயத்து அல்லது போராட்டத்தில் மூன்று மணி நேரத்தில் சம்பாத்தியம், அரசியல்வாதிகளைப் போல் கொள்ளையடித்து ஏமாற்றி பொய் சொல்லி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

நான் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக பில்டிங் கட்டுதல் ரோடு மற்றும் பாலங்கள் கட்டுதல். கார்மெண்ட்ஸ் நிறுவனம் நடத்தினேன் அதில் பல ஆயிரம் பேர்களுக்கு வேலை கொடுத்து வேலை வாங்கி உள்ளேன். வண்டி வாகனங்கள் இதையெல்லாம் வைத்து வேலை வாங்கி அதில் வேலை செய்த தமிழர்கள் இப்பொழுது வேலை செய்வது இல்லை, முழுவதும் வட நாட்டு மக்களுக்கு தான் வேலை தமிழர்கள் இப்பொழுது கிடைப்பது இல்லை அதனால் வெளிமாநிலத்தவர்கள் இங்கே உடல் உழைப்பு தந்து தனது பொருளாதாரத்தை வலிமைப்படுத்தி கொண்டிருக்கிறார்கள். விரைவில் தமிழனும் பிச்சை எடுப்பான் அன்று புரியும்.

ஹார்டுவேர்ஸ், பெயின்டர்கள் கார்பெண்டர், பெரிய ஆள் ஹெல்பர்கள் பிட்டர்கள், டெயிலர்கள், மேஸ்திரிகள் முக்கிய தொழிலாக ஹோட்டல்கள், ஹோட்டல்களில் வேலை செய்பவர் மாஸ்டர்களே இப்பொழுது வடநாட்டவர் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள் எல்லா தரப்பட்ட உடல் உழைப்பு தரும் ஆட்கள்.

தாம்பரத்தில் முக்கிய ஹோட்டலில் தோசை மாஸ்டர் வட நாட்டவர் அவரிடம் பேசினோம் அவர் சொன்ன விவரங்களுக்கு தலை கிருகிருத்தது. மாதம் மாதம் 10,000 (பத்தாயிரம்) அனுப்புகிறேன் என்று



அந்த வடமாநிலத்து தொழிலாளி சொன்னார் அப்படியா என்று கேட்டு விட்டு வந்து விட்டேன். வந்த பின் தான் யோசித்தேன் இந்த ஒருவர் மாதம் 10,000 அனுப்புகிறார். இப்படி 10 பேர் அனுப்பினால் ஒரு லட்சம், நூறுபேர் அனுப்பினால் ஒருகோடி, ஆயிரம் பேர் அனுப்பினால் பத்துகோடி, ஒரு லட்சம் பேர் அனுப்பினால் ஆயிரம்கோடி.

மனம் அய்யய்யோ என்று அதிர்ச்சியடைந்தது முதலில் இவரின் கூட்டம் தமிழகத்தில் எவ்வளவு இருக்கிறது என குத்து மதிப்பாய் கணக்கு எடுப்போம் என பலரிடம் கேட்டேன் தொழில் நகரங்களான பெரும் நகரங்களில் மாவட்ட அளவில் உதாரணத் திற்கு திருப்பூரில் மூணுலட்சம் பேரும் கோவையில் ஏழு லட்சம் பேரும் சென்னையில் 20வது லட்சம் பேரும் இருப்பார்கள் என சொன்னார்கள். அப்போ சேலம் ஈரோடு போன்ற இன்ன பிற மாவட்டங்களில் எவ்வளவோ தெரியாது என்றார்கள் அதிர்ச்சியில் உறைந்துபோன நான் சென்னை, கோவை, திருப்பூர் மட்டும் கணக்கில் எடுத்துக்கொள்வோம் என முடிவெடுத்து கணக்குப் பார்த்தேன் மொத்தம் முப்பது லட்சம்பேர். ஒருவர் மாதம் மாதம் 10பத்தாயிரம் என்றால் 30 லட்சம் பேர்க்கு கணக்கு போட்டேன் மூனாயிரம் கோடி எனக்காட்டிவிட்டு கால்கு லேட்டரே தன்னை காலாவதியாக்கிக் கொண்டது.

மாதம் மாதம் 3000கோடி என்றால் வருடத்திற்கு 36,000 கோடி இது அனைத்தும் தமிழ்நாட்டில் புழக்கத்தில் இருந்தால், அந்தச் சிறு பணப் புழக்கம் கொண்டு தமிழக மக்களையும் சிறு குறு பெரும் வியாபாரிகளை வளமாக வாழ வைக்க வேண்டிய இந்தப்பணம் வடமாநிலங்களில் புழங்கிக்கொண்டி ருக்கிறது. அங்கே இருக்கும் மக்களையும் சிறு குறு பெரும் வியாபாரிகளையும் வாழவைத்துக் கொண்டிருக்கிறது.

இது வெறும் தமிழகத்தின் மூனு மாவட்டக்கணக்கு. மீதம் இருக்கும் 36 மாவட்டத்திலும் வடமாநில தொழிலாளிகளை குத்து மதிப்பாய் கணக்கெடுத்து கூட்டிப்பார்த்தால் தலை சுத்தி மயக்கம் வந்து மூர்ச்சையாகி இறந்தாலும் இறந்து விடுவோம்.

இது வட மாநிலத் தொழிலாளர்கள் கணக்கு இன்னும் வடமாநில சுயதொழில் செய்யும் வியாபாரிகள் முதலாளிகள் போன்றோர்களை கணக்கெடுத்து அவர்கள் ஈட்டும் வருமானங்களை கூட்டிக் கழித்துப் பார்த்தால் அய்யய்யோ நினைத்து பார்க்க முடியவில்லை.

இன்னொரு பிரச்சினை பணப்புழக்கம் இல்லாமல் இருக்கும் காரணம் கைத்தொழில். எல்லாவகையான சிறு பொருட்கள் சீனாவிலிருந்து இறக்குமதி ஆகிறது அதனால் லட்சக்கணக்கான பொருட்கள் அதாவது, உளி சுத்தியல் ஆரம்பித்து மருத்துவ ஊசி வரை. ஏற்கனவே இங்கு இருந்த நிலை?

**சத்தமின்றி யுத்தமின்றி தமிழன் சாராயத்தாலும் உழைப்பில்லாமலும் இந்த மாபெரும் பொருளாதார போராட்டத்தில் அழிக்கப்பட்டுக்கொண்டு இருக்கிறான் என்பதை மட்டும் உணர முடிகிறது இதை தமிழன் எப்போது உணர்வது? மிகவும் கொடுமையானது, ஆனால் நம்பி ஆகவேண்டிய உண்மை விவரம். பயிர்த் தொழில் இப்போது கொஞ்சம் கொஞ்சமாக வட நாட்டார் கைகளில் சென்று கொண்டுள்ளது. களை எடுத்தல் அருப்பு அருத்தல், மருந்து அடித்தல் என வர ஆரம்பித்து விட்டார்கள் இனி என்னாகும் யோசியுங்கள்.**

சத்தமின்றி யுத்தமின்றி தமிழன் சாராயத்தாலும் உழைப்பில்லாமலும் இந்த மாபெரும் பொருளாதார போராட்டத்தில் அழிக்கப்பட்டுக்கொண்டு இருக்கிறான் என்பதை மட்டும் உணர முடிகிறது இதை தமிழன் எப்போது உணர்வது?

மிகவும் கொடுமையானது, ஆனால் நம்பி ஆகவேண்டிய உண்மை விவரம். பயிர்த் தொழில் இப்போது கொஞ்சம் கொஞ்சமாக வட நாட்டார் கைகளில் சென்று கொண்டுள்ளது. களை எடுத்தல் அருப்பு அருத்தல், மருந்து அடித்தல் என வர ஆரம்பித்து விட்டார்கள் இனி என்னாகும் யோசியுங்கள்.

பட்டாலும் கெட்டாலும் வருந்தாத தமிழன் இருக்கும்வரை தமிழனுக்கு எதிரான இந்தப் பொருளாதாரப் போராட்டம் தொடர்ந்து, நாம் பிச்சைக்காரர்கள் மாதிரி வாழ வேண்டும். தமிழா இதையெல்லாம் நீ உணர்ந்து விழிக்கும்போது உன் பொருளாதார வளம் வறண்டு இருக்கும் அல்லது மாண்டு இருக்கும்?

●

Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 13/5 Buddha Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 Weavers Street Triplicane, Chennai-5, Editor: **V. THALAPATHI.**


அறிவை விரிவு செய்வோம்! அனைவரும் வாங்குங்கள்!!

# ஸ்ரீ பாரதி பப்ளிகேஷன்ஸ்

SRIBHARATHI PUBLICATIONS

## நூல் வெளியீட்டகம் & விற்பனையகம்

### எமது புதிய வெளியீடுகள்




புதிய எண் : 17, பழைய எண் 8, தம்பையா ரெட்டி சாலை, மேற்கு மாம்பலம், சென்னை – 600 033

cell : **9952 335505**

web : www.babapublications.in E-Mail: sribharathipathippagam@gmail.com

MUTRAM - Tamil & English Monthly RNI No. TNBIL/2010/36924.

